செந்தமிழ்

குதி 72	திருவள்ளுவர் 2006 ஆம் ஆண்டு நள மாசி மார்ச் 1977	பகுதி 1

3609

காலமும்—கோலமும் 1
கவியோகி சுத்தானந்த பாரதி

விஞ்சை வீரன் 7
திரு நா. சண்முகம்

தொழிற் பெயரும்—விளையடிப் பெயரும் 10
விமலா நடராஜ பிள்ளை

வாழ்ந்து காட்டிய வண்டமிழ்ப் புலவர் 14
புலவர் திருமேனி நாகராஜன்

தமிழில் காலமும் தொடர்நிலையும் 17

குறள்நெறி விளக்கம் செஞ்சொற் பாவலர் 20
ப. சங்கரலிங்கம்

தமிழ் மனம் பரப்பிய சேதுகாவலர் 26
திரு ஆர். காசிநாததுரை

அண்ணாமலை பல்கலைக் கழகம் 27
தமிழ்த்துறை

சங்கச்செய்திகள் 29

சிறுவரைப் பயந்த செம்மலோர் 31
அருட்கவி கு. செ. இராமசாமி எம். ஏ,

கன்னியாகுமரி, மாவட்டம்—ஊரும் பேரும் 38
தி. முத்தந்தன், எம். ஏ.

திராவிட மொழிகளில் வண்ணனை அமைப்பும்— 43
வரலாற்று அமைப்பும்

திருமிகு. இரா. கோதண்டராமன், எம். ஏ. எம். எ.

3609

கவியோகி மகரிசி கலாசிகாமணி

சுத்தானந்த பாரதியார்

தவம் பெற்ற தவம், சமயோக சித்தர், ஜீவன் முக்தர், கல்விக் கடல், அருட்கவி. இவர் ஐந்து வயதில் சுத்த பராசக்தியருளால் பாடத்தொடங்கி, இன்றும் இளம் பொலிவுடன் தியானத்தில் இறைவனைப் பாமலரால் வழிபடுகிறார். இவர் வாழ்க்கை முழுதும் அருள் இய்க்கம். முற்பிறவியில் விட்டகுறையால் இவர் சிறு வயதிலேயே யோக சித்தி பெற்றார். நடராஜப் பெருமானே இவரது குருநாதர். பூரணானந்தர், ஞானசித்தர், நரசிம்மபாரதி, சித்தாரூடர்' சீரடி சாயிராம், உபாசனிபாபா, மேஹர்பாபா, பகவான் ரமணர், அரவிந்தயோகி, மகாத்மா காந்தி, திலகர், வ. வே. சு. ஐயர் போன்ற பெருந்தகையாளருடன் இருந்து பயின்று, இவரது அறிவும் கலையும் ஆன்மசித்தியும் பொலிவுற்றன. 30 ஆண்டுகள் மௌனத்தில் மகாதுரீய சமாதியில் ஆழ்ந்திருந்து, தமது யோகானுபவங்களை பாரத சக்தி, யோக சித்தி, கீர்த்தனாஞ்சலி நடனாஞ்சலி, உலகப் பாட்டு, சிங்கநாதம், குழந்தையின்பம், காலத் தேர், தியானமாலை முதலிய ஆயிரம் நூல்களாக உலகிற்கு ஈந்த கவியரசர், கலையரசர் சுத்தானந்தர். இவர் உலக நாடுகளை ஏழுதரம் சுற்றி, பல மேடைகளில் தமது சமயோகக் கருத்துக்களை விறிட்டார். மேற்கும், கிழக்கும், வடக்கும், தெற்கும், வட்டவானச் சுற்றுப் போல இவர் வாழ்வில்ஒளிரும். இவர் ஒரே கடவுளுணர்வில், உலக மாந்தர் ஒரே குலமாக வாழத்தொண்டு செய்யும் யோக விஞ்ஞானி. இன்றும் இவர் விஞ்ஞானக் குழுவிலும், மருத்துவக் குழுவிலும் யோகப் பணி புரிகிறார். சுத்தானந்தர் பத்து அரிய பத்திரிக்கைகளுக்கு ஆசிரியராய் இருந்தவர். சுத்தானந்தர் வாழ்வு அருட்சார்பில் அடக்கமாக, எளிய, ஒள்ளிய தெள்ளிய ஊற்றருவியாகப் பாய்கிறது இவரது ஆங்கில, தமிழ் நூல்கள் உலகப் புகழ் பெற்றவை. சுத்தானந்தர் அருட்கோயில் அமைத்து சமயோக சித்தர்களைப் பயிற்றி உலகப்பணி பரவவுள்ளார். அருளும், பொருளும் அன்பும், அறமும் கூடிய அவர் எண்ணம் நிறைவேறுக.

ஆ. ஆண்டியப்பர்
பொறுப்பாசிரியர்

காலமும் - கோலமும்

[தொகுதி 71. பகுதி 4ன் தொடர்ச்சி]

9 கலையும் - மலையும்

[நடந்த கதை: அறிவொளி மதுரைக் கல்லூரியில் B.Sc மாணவன், சிந்தனையாளன், பகுத்தறிஞன், விஞ்ஞானி. அவன் நண்பன் பேச்சழகன் பலவான், சீர்திருத்தன். இருவரும் காலத்தின் கோலத்தைக் கண்டு ஆராய்கின்றனர். இருவரும் மீனுட்சி கோயிலுக்குச் செல்லுகின்றனர்- சிற்ப அழகையே காண்கின்றனர். கசகச கூட்டமும், மணியாட்டமும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. மீனுட்சி மண்டபத்தில் அமுதம் பாடுகிருள்: வீணு யாழிசைக்கிருள்: அறிவொளியின் உள்ளம் பாட்டில் உருகுகிறது. அவனுள் கடவுளன்பு விழித்தெழுகிறது.... அமுதவல்லியிடம் கவர்ச்சியுண்டாகிறது .....

கல்லூரியில் தேர்வு அறிக்கை ஒட்டுகிருர்கள். அறிவொளி B.Sc இரண்டாவது ஆண்டு தேறி மூன்ருவது ஆண்டு படிக்கிருன் பேச்சழகன் தேர்வுக்குப் பிறகு வேலை தேடுகிருன். மாணவர் கூட்டமும் கும்மாளமும் நடக்கின்றன. அறிவொளி மாணவர் மன்றத் தலைவன். மாணவர் ஒழுக்கம் பற்றிப் பேசுகின்ருன். தேரா மாணவர், தேர்ந்து வேலையில்லாதவர், கற்றும் வறுமை பற்றி வருந்தும் மாணவர் எல்லாரும் இக்காலக் கல்வியை தூற்றுகின்றனர். பெரியதம்பி ஆசிரியர் சின்னத்தம்பியைக் கிண்டல் செய்கிருன். கோலப்பன் தன் மனைவி மலைவளர்தாரலிக்கு அட்டில் வேலை செய்து பிழைப்பதை நடிக்கிருன். எஞ்சினியர் இளஞ் சிறுத்தை, சம்பமடிக்கும் தம்பட்டனர், பாயில் (Boil) நளபாகம். அரோகரா கும்பல், ரகளை ரௌடிராமன், எல்லாரும் தற்காலப் படிப்பையும் தேர்வையும் இடித்துரைத்த பிறகு புலவர் அன்புமணி அமைதியாக மாணவருக்கு நல்லுரை சொல்லுகிருன். பிறகு அமுதவல்லி பாடுகிருள். வாழ வேண்டும் உலகில் என்ற பாட்டு அனைவரையும் உருக்குகிறது. அறிவாளி ஆவேசங் கொள்கிருன். அமுதம் தந்தை தாய் தம்பிமாருடன் உந்து வண்டியிலே செல்லுகிருள். அறிவாளி அந்தப்பக்கமே நோக்குகிருன். அமுதவல்லியிடம் அவனுக்கு ஆன்மநேயம் அரும்புகிறது.

மறுநாள் அறிவாளி மீனுட்சி கோயில் புகுந்து தர்மகர்த்தாவைக் கண்டு மீட்ஞசிக்கு அருச்சனை செய்து குங்குமம் இட்டுக்கொண்டு தர்மகர்த்தா விட்டிற்குச் செல்லுகிருன். அங்கே தொலைப்பேசியில் அமுதத்தின் பேச்சு வருகிறது. அமுதம் தாவர

மாணவி, அத்துடன் ஆடல் பாடல் அழகு கலைச் செல்வி இசையின்பத்தால் செடி கொடிகளை இன்புறுத்தி அழகிய தோட்டம் போட்டு அதிலே தன்னிறைவுடனே வாழ விரும்புகிருள். தரும கர்த்தா மகன் சங்கரன் M Sc., தேறியதுடன் பிடில் மிருதங்கமும் வல்லவன் அவன் தன்னை அன்புக்கனி என்று அழைத்துக்கொள்ளுகிருன் - அறிவாளி அமுதம் பற்றிய குறிப்புகளை தர்மகர்த்தா விடம் தெரிந்து கொள்ளுகிருன். பிறகு அவள் வீட்டு வாழ்வை அலைகிருன் இதோ மலையப்பர் தோட்டக்குடில்

மலையப்பர் எளிய குடும்பத்திலே வளர்ந்த தன் முயற்சியால் படித்துத் தொலைபேசிப் பயிற்சி பெற்றவர், அவர் மதுரையில் தொலைபேசிகளைக் கண்காணிப்பவர். எங்கே பழுதானாலும் அங்கே சென்று பழுதை நீக்கித் தெளிவாகப் பேசி வேலை செய்விப்பார். தொலைபேசி இணைக்கும் இடங்களைப் பார்வையிடுவார் ஊதியம் ரூ. 700/ அழகர் கோயில் செல்லும் நெடுஞ்சாலையில் சிறு. தோட்டத்தில் அவர் குடில் அமைத்து மனைவி மக்களுடன் நிறை முறையாக வாழ்ந்தார். மனைவி மலர்க்கொடி அன்புத்தங்கம் பள்ளியிறுதி தேறி, தையல் வேலை தேர்ந்தவள். ஓர் உஷா வாங்கி வைத்துக்கொண்டு, வீட்டுக்கு வேண்டிய உடுப்புகளுடன் தேடி வரும் வெளி வேலைகளையும் செய்து, அந்த வருமானத்தைக் கொண்டு குழந்தைகளை வளர்த்தாள். அவளும் பாடுவாள் மலையப்பர் தமது ஊதியத்தில் குழந்தைகள் பேரில் ரூ. 300 பாதுகாப்புச் செய்து. மீதியைக் குழந்தைகளின் கல்விக்கும் கலை வளர்ச்சிக்கும், வீட்டுச் செலவுக்கும் தந்தார். எல்லாருமே வீட்டைச் சுற்றி காய் கனித் தோட்டமும், மலர்த் தோட்டமும் போட்டனர். தோட்டக் கிணற்றில் ஒரு H. P. மோட்டார் போட்டுத் தண்ணீர் பாய்ச்சினர். தோட்டத்தில் தென்னை, மா, பலா. வாழை, மாதுளை, கொய்யா ஆகிய கனி மரங்கள் ஒரு புறம் தக்காளி, கத்திரி, பாகல், புடல். வெண்டை, பீர்க்கை, பரங்கி சுண்டை, தூதுளை ஒரு பக்கம் போட்டு வீட்டுக்குப் போக மீதியைக் கூடைக்காரருக்கு விற்றுத் தோட்டச் செலவுக்குச் சரிக் கட்டினர். தோட்டத்திலே கிணற்றருகே தொட்டிகள் கட்டி, வெயில் முழுக்குக்கு இடம் செய்து, இயற்கை மருத்துவம் நடத்தினர். பாலுக்கு ஒரு பசுமாடுண்டு. குப்பை கூழமெல்லாம் உரக்குழிக்குப் போகும். உரம் பயிருக்கு உணவாகும்.

மலை — மலையப்பர் மலர் — மலர்க்கொடி மலை-மல உணவு முறையும் புதிதே ததக்காளி, புடல் வெண்டை கீரைகளையெல்லாம் அவர்கள் பச்சையாகவே பதம் செய்து தயிருடன் சேர்த்துப் பச்சடியாக்கி உண்பார்கள். அரிசியும்

பருப்பும் அளவாகப் போட்டுக் கரியடுப்பில் கொதிக்கும் போது தக்காளி; பாகல், கத்திரி, வெண்டை கருவேப்பிலே கொத்துமல்லி எல்லாம் அரிந்து போட்டு, தேங்காய்த் துருவலும் போட்டு வெந்தவுடன் மிளகு சீரகம், உப்பு போட்டு எழுமிச்சம்பழம் பிழிந்து ஒரு கதம்பம் செய்வார்கள். அதை உண்டு மோர் பருகுவர். மோரில் கருவேப்பிலே கசக்கிப் போட்டு, எழுமிச்சம்பழம் பிழிந்து உப்புப் போட்டு வைப்பர். சிலநாள் உழுந்துவடை செய்து தயிரில் போட்டு உண்பர். சிலநாள் காய்கறிகளைக் கூட்டாக்கி அதில் அவலைப் போட்டுக்கிண்டியுண்பர். சில நாள் இட்டலியும் கூட்டும் உண்பர். இவர்கள் டீ, காப்பி சாப்பிடுவதேயில்லை. வெள்ளைச்சீனி சேர்ப்பதில்லை. துளசியும், கொத்துமல்லியும் வேப்பம் பூவும் அளவாகச் சேர்த்து வெயிலில் வைத்துப் பொடித்து வைத்துக் கொள்வர் அஃதில் இரண்டு சிறு கரண்டி எடுத்துக் கஷாயம் போட்டு அதில் தேன் பால் சேர்த்துப் பருகுவர். இதனல் வீட்டில் பித்தம், தலைவலி, காய்ச்சல், மலச்சிக்கல் வருவதில்லை மலையப்பர் காலை நான்கு மணிக்கே எழுந்து முதல் மணியடிப்பார் மலர்க்கொடி எழுந்து, வீடு பெருக்கி மெழுகிக் கோலம் போட்டு வழிபாட்டுக்கு எல்லாம் ஆயத்தம் செய்வாள். அமுதமும் அழகனும் எழுந்து பல் விளக்கி முகம் கழுவி வருவார்கள். உடனே ஆசனமும் பிராணயமும் கீதையும் யோக சித்தியும். பாடம் நடக்கும். சில அருட்பாடல்களை மனப்பாடமாக்குவர். இதற்குள் ஆறு மணியாய்விடும் தோட்ட வேலை நடக்கும் பிறகு எல்லாரும் நீராடி கடவுள் வழிபாடு நடத்தி தியானித்துப் பால் கஞ்சி அல்லது கனிச்சாறு குடித்து அவரவருக்குரிய படிப்பிலும் தொழிலிலும் ஈடுபடுவர் மணி ஒன்பதரைக்கு உணவு தயாராகும் உண்டதும் பத்து மணித்துளி இளைப்பாறி, மலையப்பர் தொலைபேசி நிலையம் செல்வார். மக்கள் கல்லூரிக்குச செல்வர். மலர்க்கொடி தையல் வேலை செய்வாள். மீண்டும் மாலையில் தோட்ட வேலை நடக்கும். அந்திசந்தி பிராணயமும் தியானமும் ஆன பிறகு வெளிச்சத்துடன் கனியுணவு கொள்வர். அதன் பிறகு மக்கள் பாடம் படிப்பர். மலையப்பரும் மலர்க் கொடியும் நல்ல நூல்களை ஓதிச்சிந்திப்பர் ஒன்பது மணிக்கு வீட்டொழுங்குப் பேச்சு நடக்கும். ஐந்து மணித்துளி தியானித்து எல்லாரும் உறங்குவர் ஆறுமணி நேரம் உறக்கம், ஆறுமணி உழைப்பு, ஆறு மணி அறிவு வளர்ச்சி, ஆறு மணி நேரம் வாழ்க்கையமைப்பு (யோகம், உட்புறப் பயிற்சி முதலியன) வீட்டில் எல்லாரும் இசைவல்லவர். மலையப்பர்

பெட்டி வீணை வாசிப்பார்; மனைவியும் அமுதமும் பாடுவர், தம்பி மிருதங்கம் வாசிப்பான், சில நண்பரும் இசைவிருந்திலே கலந்துகொள்வர். இன்னிசைக் குரல்களை நாடாப் பதிவு செய்து நாளெல்லாம் நல்லிசை முழங்கும் இல்லற வாழ்வு. நல்லிசையின் பத்திலே நீந்திக்கொண்டிருக்கும். வேறு வீண் பேச்சிருது. இந்தக் தோட்டக்குடிலுக்கு அன்பகம் என்று பெயர் வழங்குகிறது.

காணவருவோர் முன்பே நேரம் குறித்தே வரவேண்டும். அவர்கள் பேசுவதைக் கேட்டுச் சுருக்கமாகத் தமது கருத்தைச் சொல்லி அனுப்புவார் மலையப்பர். அமுதம் இசைப்பயிற்சியிலும் கல்லூரிப் பாடத்திலும் கருத்தூன்றுவாள்.

ஓய்வு நாட்களில் மலையப்பர் குடும்பம் அழகர்மலைமேல் பழமுதிர்சோலைக்குச்செல்வதுண்டு. அங்கே தெள்ளருவியில் நீராடி முருகன் திருமுன்னர் பாடி வணங்கியதும் சமயோகியை வணங்கி அருளுரை கேட்பர்:-

10 சமயோகி

இல்லறத்திற்கு எடுத்துக்காட்டு மல்லப்பர்; துறவறத்திற்கு எடுத்துக்காட்டு சமயோகி. சமயோகி மிகச் சிறந்த புலவர், கவிஞர், இசைவாணர், சிந்தனைச் செல்வர், இறைவனருள் பெற்ற பெரியார் நிறைவான யோக சித்தர், உலகெல்லாம் சுற்றிப் பார்த்துத் தமது கருத்தை அனுபவங்களை "அனுபவம்"என்றஉரை நடை நூலாகவும், "ஜீவநாதம்" என்ற இசை நூலாகவும் எழுதி உலகிற்கு அளித்து விட்டு உள்ளடங்கி அமைதியின்பத்தில ஆழ்ந்திருப்பவர். அவரே பழமுதிர்சோலையை அழகும் அருளும், அன்பும் இன்பமும் குலுங்கும் சோலையாக்கினர். அவரது ஆன்ம ஒளி அன்பர் உள்ளமெல்லாம் பரவி ஒளிர்கிறது. அவர் முன்னர் மௌனமாக அமர்வதே சிறந்த யோக சாதனமாகும். அவர் கொண்ட அருட்பணிகளில் ஈடுபடுவதே சிறந்த கருமமாகும். அவரது நூல்களைப் படித்து, பாடல்களைக் கேட்பதே ஞானயோகமாகும். அவரிடம் அன்பு வைப்பதே பக்தி யோகமாகும். அவர் ஆசியாலேதான் அமுதத்தின் குரல் குயிலானது,

சமயோகியின் வயது, ஊர், பேர் உறவுசுற்றம், உடல் வரலாறுகள் யாருக்கும் தெரியாது ஆனல் தெரிந்ததாகப்பலர் பிதற்றுவர். அவரைக் கேட்டால்... சிறிது கண்ணை மூடியிருந்து பாடுவார்:

எங்கிருந்து வந்தோம்— நாம்
எங்கு செல்லுகின்றோம்
இங்கிருந் தென் செய்தோம்— இறைவன்
இன்னருளால் உய்தோம்
வந்து போன தெல்லாம்— இனி
வாராவகை பெறவே— எல்லாம்
தந்து செல்லுகின்றோம் — மனந்
தன்னை வெல்லுகின்றோம்
மனமயங் கடந்த— துரிய
மலையில் வாழுகின்றோம்
இனமயக்கமின்றி— தூய
இதயமன்றில் வாழ்வோம்

முனிவர் அனுபவம் என்ற நூலில் ''நான்'' என்றுகுறியாமலே சுவையான உயிரோட்டமுள்ள நிகழ்ச்சிகளைச் சொல்லுகிறார், பாடுகிறார்— இத்தகைய மௌனயோகி

''ஒரே கடவுள் ஒரே உலகம்
ஒரே ஆன்மநேயர் நாம்''

என்ற ஆன்மநேய ஒருமைப் பாட்டையே பெரிதும் விளக்குவார். சாதி சமய நாடு நிற மொழிவேறுபாடுகளை மறந்து மாந்தரெல்லாம் ஆன்ம ஒருமையிற் கூடி வாழ வேண்டும். எளியதூய இயற்கை வாழ்வு வாழவேண்டும் என்று அவர் வாழ்ந்து காட்டுகிறார்.

இத்தகைய முனிவர் பழக்கத்தால் மலையப்பர் வாழ்வு பண்பட்டது. சமயோகி முருகனைச் சிவச்சுடர் எனக் கண்டார். சிவனுடைய புருவச் சுடரே முருகனாக விளங்குகிறது — புருவ நடுவே தியானிப்பதே சிறந்த முருக வழிபாடு என்பார்.

''உலகெலாம் கோயில்; உயிர்த்தொகை சாமி நலமெலாம் வழிபாடு; நாளெலாம் நன் முயற்சி'' என்பார் சமயோகி. வேதம் பல இடங்களில் சரி நிகர் சமானமாக வாழ, சமவுணர்வுடன் பழகச் சொல்லுகிறது. வேதாகமங்களின் யோக சாதனம், புத்தரின் கருணை' மகாவீரரின் அகிம்சை, காந்தியின் சத்திய விரதம், கீதையின் கர்மயோகம், குரானின் பக்தியோகம், கிறித்துவரின் அறிவுத் தொண்டு, அரவிந்தரின் பூரண யோக வாழ்வு, இரமணரின் ஆத்ம

விசாரம், இராமதீர்த்தரின் வேதாந்தப் பொதுமையுடன் வாழ்வை வளப்படுத்தும் விஞ்ஞானமும் சேர்ந்ததே சமயோகம் என வாழ்ந்து காட்டினர் முனிவர்— அவர் சமயோகத்தை Spiristial Socialison (ஆன்மீகப் பொதுனம் என்பார்.)

மனத்தில் அருள் மல்கி
மாஞலகம் உய்யும்
தனைதுறந்த தொண்டே தவம்

என்பது சமயோகியின் அருளுரை—அவரை ஒரு முறை கண்டு கலந்தால் போதும்; எப்போதும் அவர் யோக சக்தி நம்முள் சுழன்று முன்னேற வழிகாட்டும், இத்தகைய முனிவர் இந்தக் காலத்தையும் கோலத்தையும் கண்டு ஞாலம் நல்ல வழியில் வாழ அடக்கமாகச் செய்யும்பணிகளை இடையிடையே காண்போம்... இனி மலையப்பர் வேலைசெய்யும் மின்வாரியத்திற்குச் செல்லுவோம்.

கவியோகி சுத்தானந்தபாரதி

விஞ்சை வீரன்

நா. சண்முகம்

கோவை-18

சிலப்பதிகாரத்தின் கடலாடு காதைப் பகுதியில் வரும் ஒரு கதா பாத்திரம் இவ்விஞ்சை வீரன், விண்ணிலே வாழும் தேவர் கூட்டத்தைச் சேர்ந்தவனல்லன்-மண்ணிலே வாழும் மனிதர் பரம் பரையினைச் சேர்ந்தவனல்லன். விண்ணிலே வாழ்பவன் என்ருலும் மண்ணுலகின் மேல் பற்றுக்கொண்டவன். சுருங்கச் சொல்வதானல் அவன் ஒரு மாயவி! அவனுடைய பெயர் முதலிய விபரங்கல் எதனையும் இளங்கோவடிகள் எடுத்துக் கூறவில்லை.

இமயமலையில் நடைபெற்ற இறைவிழா ஒன்றினுக்கு அவன் தன் காதலியுடன் வருகைபுரிந்ததாக அறிமுகப் படுத்துகிருர் அடிகளார். அவன் அவ்விழாவிலே கலந்து கொண்டதால் நமக்கு கிடைக்கும் செய்தி என்ன-நமக்கு விளக்க விரும்பிய செய்தி என்ன என்ற விபரம் ஏதும் தெரியவில்லை.

இமயமலையில் காமன் விழாவுக்கு வந்தவனுக்குப் புகார் நகரத்து இந்திர விழா நடைபெறும் நாள் நினைவுக்கு வரவே காதலியுடன் புறப்பட்டுக் கங்கையைக் கடந்து,உஜ்ஜயினி நாட்டை விட்டு நீங்கி வேங்கடமலையைத் தாண்டிக் காவிரி நதியைக் கடந்து புகார் நகரை அடைகிருன்.

அங்கே நடக்கும் விழாவினைத் தன் காதலிக்குக் காட்டி முறைப்படி தொழுது விட்டு வருகையில் ஆடல் கலையில் சிறந்து விளங்கிய மாதவியைக் காட்டுகிருன். அதன் பிறகு அவன் என்ன வாஞன்? அவனுக்கு என்ன நேர்ந்து என்று நாம் ஒன்றும் உணர்ந்து கொள்ள முடியாத ஒரு புதிராக விட்டு விட்டார். இக்கதாபாத்திரம் புகுத்தப்பட்டதின் நோக்கம் என்ன?

அந்தக் காலத்தில் புகாரின் பெருமை-இந்திரா விழாவின் சிறப்பு-இமயம் வரை பரவி இருந்தது என்பதை எடுத்து காட்டு வதற்காக மட்டுமா? அப்பெருமையினை-சிறப்பினைக் காண ஒரு விஞ்சைவீரன் மட்டும் தன் காதலியுடன் வந்திருக்கமாட்டன் ஏராள மானவர்கள் வந்திருக்கவேண்டும். இருந்தும் ஒருவனை மட்டுமே அவர் குறிப்பிட்டதின் நோக்கம் என்ன?

மாதவி-பாடலில் வல்லவள்—ஆயினும் ஆடலில் சிறந்தவள்—ஒரு நாட்டிய தாரகை. இலக்கண நுணுக்கத்துடன் அவள் ஆடக் கூடிய நாட்டிய வகைகளை அவ்விஞ்சை வீரன் கூறுகிறான்—அவன் அதற்கு முன்பே அந்நகருக்கு வந்திருந்ததாகவோ மாதவியின் நாட்டியக் கூத்துக்களைப் பார்த்ததாகவோ அவன் சொல்லவதில்லை—அதாவது இளங்கோவடிகள் கூறவில்லையே ஏன்?

இந்தக் காலத்தில் கதை எழுதும் ஆசிரியர்கள் தாங்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று வருகிறார்கள். ஆங்காங்கே அவர்கள் கண்டுகளித்தவற்றை—கேட்டு அறிந்தவற்றை ஒருகதாபாத்திரத்தின் மூலமாகத் தாங்கள் எழுதும் கதையில் கூறுகிறார்கள் விளக்குகிறார்கள் இதுபோல் அக்காலத்தில் இயங்கோவடிகளும் இமயமலை வரை சென்று வந்திருக்கவேண்டும். அவருக்கு அங்கே—அதாவது வடபுலத்தில்—பிடித்தமான இடம் உஞ்ஜையம் பதி என்று அழைக்கப்பட்ட உஜ்ஜயினி நகரமாகும்பௌத்தமக ஆராய்ச்சிக்காக. இளங்கோவடிகள் அங்கேசென்று பலமாதங்கள் வரைதங்கியிருந்து யாத்திரை சென்று தமது தாயகம் திரும்பி இருக்கவேண்டும். அவர் இமயமலையில் தங்கியிருந்த சமயத்தில்அங்கே காமன்விழா நடந்திருக்க வேண்டும். அதைவிடச் சிறப்பாகப் புகார் நகரத்தில் நடக்கும் இந்திரவிழா அவருக்கு நினைவுவந்திருக்க வேண்டும். அவர் தன் பயணப்பாதையையே விஞ்சைவீரனின்பாதையாகக் கூறியிருக்க வேண்டும். விஞ்சை வீரனின்பயணத்தில்வேறு ஊரின் பெயர்கள் இடம்பெறாததிலிருந்து இளங்கோவிற்கு உஜ்ஜனியின் மீது தணியாத பற்று ஏற்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

இக்காதைக்கு முந்தின காதை — இந்திரவிழ வூரெடுத்த காதை—யில் இளங்கோவடிகளே புகார் நகரின் அமைப்பினையும் விழாவினையும் கூறி விடுகிறார். அக்காதையில் இடம்பெறாத விஞ்சைவீரனை அடுத்த காதையில் கொண்டு வருவதின் நோக்கம் என்ன? கடலாடு காதையில் அவன் வருவதால் நமக்கு எந்தப்புதிய விளக்கமும் கிடைத்து விடுவதில்லை. அடிகளார் அவனை இக்காதையில் கொண்டு வருவதின் நோக்கம் வேறாயிருக்க வேண்டும்.

அக்காலத்தில் இமயம் முதல் குமரிவரை இக்கண்டத்தில் பல்வேறு அரசவம்சங்கள் இருந்தன: மக்களின் நடையுடை பாவனைகள்—பழக்கவழக்கங்கள் வெவ்வேறானவை! இவற்றை எல்லாம் ஆராய்ந்து வந்திருந்த அடிகளார் ஒரு கற்பனைக்

கதாபாத்திரத்தை—விஞ்சைவீரனை—உருவாக்கினர். அவன் தன் காதலியுடன் புறப்பட்டு வழியில் அவற்றை எல்லாம் அவளுக்குக் கூறுவதன் மூலமாக இப்பரத கண்டத்தின் சிறப்புக்களை—வளப்பங்களை விளக்கிக் கூற ஆசைப்பட்டிருக்கலாம்.

அவர் ஆசைப்பட்டபடி கூறி இருப்பாரேயானல் நமக்கு அக்காலப் பரத கண்டத்தைப் பற்றிய விபரங்கள் தெளிவாகக் கிடைத்திருக்கும்.

பிறகு அடிகளாரின் மனம் மாறி இருக்க வேண்டும், காரணம் பரதகண்டத்தின் சிறப்புக்களைக் கூறினல் அதுவே பெரிய காப்பியமாகிவிடுவதுடன் சிலப்பதிகாரத்தின் பெருமை குன்றிவிடும் என்பதுடன்—அதை எழுதுவதற்காகப் போதிய கால அவகாசமும் கிடைத்திராது என்றே தோன்றுகிறது.

அதனல் இளங்கோவடிகளார் தாம் இயற்றிய கதாபாத்திரத்தைச் சரியான வகையில் பயன்படுத்திக்கொள்ள முடியாமல் விட்டுவிட்டார் என்றே கூற வேண்டும்,

அவ்விஞ்ஜை வீரன் தேவையற்ற ஒரு கதாபாத்திரமாகவே நமக்குத் தோன்றுகிருன்.

தொழிற் பெயரும் வினையடிப் பெயரும்

ந. நடராஜ பிள்ளை
விமலா நடராஜ பிள்ளை
இந்தியமொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

வினையிலிருந்து உருவாக்கப்படுகின்ற பெயர்கள் தான் தொழிற்பெயரும் வினையடிப் பெயரும் தமிழ் மரபு இலக்கணங்களில், வினைப்பகுதியாக வினையடிச் சொல்லே பெயராக அமைந்து வருகின்ற முதனிலைப் பெயரையும் வினைப்பகுதியாகிய வினையடிச் சொல் திரிந்து நின்று பெயராக வருகின்ற முதனிலைத் திரிந்த பெயரையும், வினைப்பகுதியாகிய வினையடிச் சொல் — தல், — அல், — அம், — ஐ, — கை, — வை, — கு, — பு, — உ, — தி, — சி, — வி, காடு, — பாடு, — (அ) து முதலிய விகுதிகளில் ஏதாவது ஒன்றைப் பெற்றுப் பெயராக வருகின்ற விகுதி பெற்றப் பெயரையும் தொழிற்பெயர் அல்லது வினைப்பெயர் என்ற தலைப்பின் கீழ் அமைந்திருப்பதை நாம் அறிவோம். எனினும் இக்கட்டுரையில் அவ்வாறு சேர்க்கப்பட்டிருக்கிற பெயர்களில் இருவேறு சிறப்பியல்புகளையும் செயலாற்றத்தையும் உடைய பெயர்கள் அமைந்திருப்பதையும், இவ்வேறு பாட்டால் இரு வேறு சிறப்பியல்புகளையும் செயலாற்றத்தையும் உடைய பெயர்கள் அமைந்திருப்பதையும், இவ்வேறுபாட்டால் இரு வேறு பெயர்களின் தேவையையும் பற்றிப் பார்க்கலாம்.

வினைப்பகுதியோடு — (த்) தல், - அது என்ற இரண்டு விகுதிகளையும் தவிர்த்து மற்ற விகுதிகளை ஏற்றுப் பெயராக வருகின்றவைகளை வினையடிப் பெயர் என்றும் — (த்) தல், — அது என்கிற இவ்விரு விகுதிகளையும் ஏற்றுச் செயலை அல்லது தொழிலைக் குறிக்கும் பெயராக வருகின்ற பெயர்களைத் தொழிற் பெயர் என்றும் கொள்வோம்.

வினையடிப் பெயருக்கும் தொழிற் பெயருக்கும் இடையே யுள்ள வேற்றுமைகளை இனிப் பார்க்கலாம்.

1. வினையடிப் பெயர்கள் மற்ற பெயர்ச் சொற்களைப் போன்ற பெயரடைகளை ஏற்கக் கூடியவை ஆனால், வினையடைகளை ஏற்ப தில்லை. எடுத்துக்காட்டாக.

நல்ல வாழ்க்கை * நன்றாக வாழ்க்கை
வேகமான ஓட்டம் * வேகமாக ஓட்டம்
சிறப்பான நடத்தை * சிறப்பான நடத்தை
மோசமான பாட்டு * மோசமாகப் பாட்டு

ஆனல் தொழில் பெயர்கள் பெயரடைகளை ஏற்பதில்லை. எவ்வினையிலிருந்து உருவாக்கப்பட்டதோ அவ்வினையைப் போன்றே வினையடைகளையும் செயப்படு பொருளையும் ஏற்கின்றன.

அழகாக நடத்தல் / நடப்பது
* அழகான நடத்தல் / நடக்கிறது
வேகமாகப்பாடுதல் / பாடுவது
* வேகமான பாடுதல் / பாடுவது

[ஒருமை அஃறிணை வினையாலணையும் பெயரும் நடப்பது, நடக்கிறது, நடந்தது போன்ற தொழிற்பெயர்களும் ஒரே விகுதியைப் பெற்றிருப்பதை கவனிக்க.]

2. எந்த வினையடியிலிருந்து உருவாக்கப்பட்டனவோ அவ்வினைகளைப் போன்றே தொழிற்பெயரும் காலம், செயப்படு பொருள் குன்றிய தன்மை, செயப்படுபொருள் குன்றாத் தன்மை, சிறப்புப் பொருள், தன்வினை, பிறவினை போன்ற வேறுபாடுகளைக் காட்டுகின்ற சிறப்பியல்புகளைப் பெற்றிருக்கும்.

ஓடுவது — எதிர்காலம்
ஓடுவது நல்ல பயிற்சி ஆகும்.
நாளை நான் ஓடுவதை எல்லோரும் பார்ப்பார்கள்.

ஓடுகிறது — நிகழ்காலம்
அவன் ஓடுகிறது அழகாக இருக்கிறது.

ஓடுவது — இறந்த காலம்

ஓடியது நல்ல பயிற்சியாக இருந்தது.
நான் அடிபட்டது யாருக்கும் தெரியாது.
நான் அந்த வேலையைச் செய்து விட்டதை யாரும் பார்க்கவில்லை.

கீழ்த்தரமான நாவல்களைப் படித்தல் மோசமானது. முதலிய மாற்றங்களைத் தொழிற் பெயர் அடைந்து வருவதைக் காணலாம்.

ஆனால் வினையடிப் பெயர்களோ தொழிற் பெயரைப் போன்று இத்தகைய மாற்றங்களை அடைவதில்லை. அது மட்டுமல்லாமல் தனிப்பெயர்ச் சொற்களைப் போன்றே சிறப்பியல்புகளைப் பெற்று வழங்கப்படுகின்றன.

வினையடிப் பெயர்கள் அந்த வினைகளின் பொருளில் (Leyical Meaning) வருவதில்லை. எடுத்துக்காட்டாக.

படிப்பு என்ற வினையடிப் பெயர் அதன் வினையான 'படி என்ற பொருளில் வராமல் 'கல்வி' என்ற பொருளில் வந்திருப்பதைக் காணலாம். ஆனால் தொழிற் பெயர்களோ அவ்வாறில்லாமல் எந்தவினையை அடியாகக் கொண்டிருக்கிறதோ அந்த வினை குறிக்கும் செயலையே குறிக்கின்றது. எடுத்துக்காட்டாக,

படித்தல், படிக்கிறது, படித்தது, படிப்பது என்பவைப் படிப்பதாகிய தொழிலைக் குறிக்கின்றன.

4. வினையடிப் பெயர்கள் மற்ற தனிப்பெயர்கள் போன்றே ஒரு. சில, பல, பெயரெச்சம் போன்ற அமைப்புக்களோடு வருகின்றன.

ஒரு வாழ்க்கை
சில படிப்புக்கள்
அவன் நடத்திய வாழ்க்கை

தொழிற் பெயர்கள் அவ்வாறு வருவதில்லை.

* ஒரு வாழ்தல் / வாழ்வது
* சில படித்தல் / படிப்பது
* அவன் நடத்திய வாழ்தல் / வாழ்வது

5. வினையடிப் பெயர்களோடு பன்மை விகுதிகளைச் சேர்த்துப் பன்மை அமைப்புக்களை உருவாக்கலாம் ஆனால் தொழிற்பெயர்கள் பன்மை விகுதிகளை ஏற்பதில்லை.

நடத்தைகள் வரவுகள்
* நடத்தங்கள் * ஓடுவதுகள்.

6. உடமைப் பொருளில் வினையடிப் பெயர்கள் மட்டுமே வருகின்றன.

உன் ஓட்டம் — உன் ஓடுதல்
அவன் பாட்டு — அவனுடைய பாடுதல்
அவனுடைய பாடுவது.

7 வினையடிப்பெயர்கள் தனிப்பெயர்கள் போன்றே சிறப்பியல்புகளைக் கொண்டிருப்பதால் தொகைப் பெயர்களை (Compound nouns) உருவாக்கும். ஆனால் தொழிற்பெயர்களுக்கு அத்தன்மை இல்லை.

பெரும் பேச்சு
* பெரும் பேசுதல்/பேசுவது.

8. வினையடிப் பெயர்களை — ஆக என்னும் விகுதி சேர்த்து வினையடையாகப் பயன்படுத்த முடியும். ஆனால் தொழிற் பெயர்களை வினையடையாக மாற்ற முடிவதில்லை.

ஓட்டம் + ஆக
ஓட்டமாக ஓடினான்
மோசமான வாழ்க்கையாக இருந்தது.

ஒன்றுக்கொன்று மாறுபட்டு இரு வேறு சிறப்பியல்புகளைக் கொண்டுள்ள பெயர்கள் தொழிற் பெயரின் கீழ் வகுக்கப் பட்டிருப்பதைப் பார்த்தோம்.

தமிழைத் தாய் மொழியாகக் கற்பவர்களுக்கும் இரண்டாவது மொழியாகக் கற்பவர்களுக்கும் இவ்விரு வேறுபாடுகளும் தெளிவாக்கப்பட வேண்டியது தேவையாகும். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு இவ்வேறுபாடு இலக்கண அளவில் தெரிந்திருக்காவிட்டாலும் இக் கூறுகளின் பயன் / செயல் அளவில் கடினம் தோன்றாது. ஆனால் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பவர்களுக்கு தொழிற் பெயர்களின் கீழ் இருவேறு சிறப்பியல்புகளையுடைய பெயர்ச் சொற்களைக் காணும் போது குழப்பம் ஏற்படுகிறது. இக் குழப்பம் தீர அவைகளின் பயன்களோடு இரு வேறு பெயர்களும் தேவையாகிறது.

வாழ்ந்து காட்டிய வண்டமிழ்ப் புலவர்

புலவர், திருமேனி நாகராஜன்
காரைக்கால்

"பொருளிலார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு" என்பது திருக்குறள். "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த விருதலையும் எய்தும்" என்பது நாலடி. "வறியா ரிருமை யறியார்" என்பது திருச்சிற்றம்பலக்கோவை. "பொருளே மன்ற பொருளே என்பது குறுந்தொகை, இவற்றால், பொருளின் சிறப்பும் இன்றியமையாமையும் தெற்றெனப் புலப்படும்.

அவ்வின்றியமையாப் பொருளைத் தேடும் பொருட்டுப் பண்டைய தமிழகத்தில் மனைவியைப் பிரிந்து கணவன் வேற்றுப்புலம் சென்ற கதைகள் பலவுண்டு. அக்காலத்தில் பிரிவை எண்ணி அவனுறும் துன்பத்திற்கோர் எல்லையேது? என்ன? 1. "பேரமர்க் கண்ணி யிருந்த வூரே, நெடுஞ்சே ணரிடை யதுவே நெஞ்சே, பெருவிதுப் புற்றன்றே னேகோ யானே" என்பது பிரிவுற்ற ஒரு தலைவனின் அவலம். 2. "அஞ்சுவ தறியா தமர்துணை தழீஇய நெஞ்சுநப் பிரிந்தன்று, சேய வம்ம விருவா மிடையே" என்பது பிரிவுற்ற மற்றொரு தலைவனின் ஓலம்.

பொருள்வயின் பிரிந்த தலைவனின் அவலம் இங்ஙனமாகத் தலைவன் பிரிவால் தலைவியுறும் அவலமோ சொலவந் தரத்தகன்று என்னை? 3"யாங்கறிந் தனர்கொல் தோழி, அருஞ்சுர வைப்பிற் கானம், பிரிந்துசே ணுறைதல் வல்லு வோரே" என அலமந்து தேய்வாள் ஒருத்தி. 4"ஆர்கலி யேற்றொடு கார்தலை மணந்த கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி, எயிறென முகைக்கு நாடற்குத், துயிறுறந் தனவாற் றோழியென் கண்ணே" எனவாடி வதங்குவாள் மற்றொருத்தி.

---

1. குறுந்தொகை; பாடல் எண் : 131
2. குறுந்தொகை: பாடல் எண் : 237
3. குறுந்தொகை ; பாடல் எண் : 154
4. குறுந்தொகை ; பாடல் எண் ; 186

இவ்வாறு பிரிவுற்ற தலைவனும் தலைவியும் தாங்களும் துயர் கொண்டு துவளும் கதைகளைச் செந்தமிழ் இலக்கியங்களில் மிகக் காணலாம், கண்டு நாமும் கண்ணீர்கூட விடலாம். ஆனால், வறுமை எத்துணைத்தான் வாட்டிக் கசக்கிப் பிழிவதாயினும் பிரி-வென்பதைக் கனவிலும் நினையாது மகன்றிற் புணர்ச்சி போல வாழ்ந்து சிறந்தார் மிகச்சிலரே. அவருள் தலைமையாளராகச் சங்கச் சான்றோர் ஒருவர் காணப்படுகிறார். அவரே சிறைக்குடி ஆந்தையார் என்னும் சொம்மாப்புடைப் புலவர். அவரைப் பற்றி அறிதற்குப் புறச்சான்றுகள் யாதொன்றும் இல்லை. அகச்சான்று-களே உண்டு அவை குறுந்தொகையில் எட்டும், நற்றிணையில் ஒன்றுமாகக் காணக்கிடக்கின்றன. அவை கொண்டு அவர்தம் வாழ்வியலை ஈண்டுக் கண்டு பயன் பெறுவாம்.

ஒருமுறை சிறைக்குடி ஆந்தையார் இல்லறத்தை இனிது நடத்தி வருங்காலத்து வறுமையின் வாய்ப்படுகிறது அவரது இல்வாழ்வு. பொருளின் இன்றியமையாமையை அவர் உணர்கிறார். உணரவே, பொருள் கருதிப் பிரிய அவர் உள்ளமும் விரும்பு-வதாயிற்று. ஆனல், ஆந்தையார் மனைவியோ 5"வல்வரவு வாழி-வோர்க் குரை" என்னும் பெரும்பண்டினள். ஆதலின், பொருள் சுடைக்கூட்டிய நெஞ்சினை நோக்கிப் புலவர் பேசுகிறார் கேளுங்கள்

"என் நெஞ்சே, நீ வாழ்க! தலைவியுடன் தங்கி விட்டால் பொருள் பெறுவது முடியாது; பொருள் பொருட்டுப் பிரிந்தாலோ புணர்ச்சி இல்லாதாகும். ஆதலின் இவ்விரண்டில் நன்று ஒன்றினைத் தேர்ந்தெடுத்திடுக ஆயினும் பொருளோ நில்லா நெறியது. யானோ வெனில் பெருநிதி பெறுவதாயினும் அதனைச் சிறிதும் விரும்பாது தலைவியிடமே தங்குவேன் இனி அப்பொருள் என்ன வாயினும் ஆகுக,

6. புணரின் புணராது பொருளே பொருள் வயிற் பிரியின் புணராது புணர்வே யாயிடைச் சேர்பினுஞ் செல்லாயாயினுநல்லதற் குரியை வாழியென் னெஞ்சேபொருளே வாடப்பூவின் பொய்கை

---

5. திருக்குறள்; எண்: 1151

நாப்பண் ஒடுமீன் வழியிற் கெடுவ யானே விழுநீர் வியலகந் தூணி யாக எழுமா ணளக்கும் விழுநெறி பெறினுங் கனங்குழைக் கமர்த்த சேயரி மழைக்கண் அமர்ந்தினிது நோக்கமொடு செகுத்தனன் எனைய ஆகுக வாழிய பொருளே!

ஆந்தையார் கூற்று அறிந்து அவர் மனைவி "தலைவர் பிரிவார் போலும்,, எனமிகவும் வருந்து வாளாயினள் மனையுறை மகளிர்க் காடவருயிரென,, தலைவரே முன்னுரைத்தார். அப்படிப்பட்ட அவர் பிரிவாராயின் "நான் வாழேன்" எனத்துயர் கொண்டாள். கற்புடையப் பெண்டிர்க்குக் கணவன் உள்ள இடமே தமது வாழ்விடம் என்பது சான்றோர் கொள்கையாதலின் தலைவர் பொருள் கருதிப் பிரிந்தால் தானும் உடன் போவதென வாடியும் ஊடியும் நின்றாள்.

மனைவி எண்ணத்தை குறிப்பால் உணர்ந்த ஆந்தையார் மிக வருத்தம் கொண்டு தம்மொடு தாமே பேசுவாராகி "வேட்டையாடும் செந்நாய் தோண்டி உண்டு எஞ்சிய மலர்கள் மூடிய அழுகவற்ற சிலவாகிய நீரைத் தலைவி எம்முடன் சேர்ந்துண்ண வருவாளாயின் அந்தோ! எம்நெஞ்சில் நிலைபெற்ற அவள் மிக்க இரக்கத்திற்கு உரியள் என உள்ளம் உடைந்து உரைப்பார்.

7 வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சிற் குளவி மொய்த்த வழுகற் சின்னீர் வளையுடைக் கைய ளெம்மொ டுணீஇயர்
வருகதில் லம்ம தானே
அளியளோ வளியளெந் நெஞ்சமர்ந் தோளே

தலைவியின் ஊடற்கும் வாடற்கும் தாம் உள்ளத்கள வேனும் பிரிவினை எண்ணியதே காரணியமென ஆந்தையார் தெளிந்தார். தெளிந்து தலைவியின் ஊடலைத் தீர்ப்பாராகி அவள் கூந்தல் தொட்டுத் தோளும் நுதலும் தடவி "8 நீ பூப்பெய்திய மூன்று நாளும் உன்னைப் பிரிந்து வாழ்வது ஓர்யாண்டு அளவு பிரிந்தாற் போல் இருக்கின்ற எனக்குப் பிரிவென்பது எப்படி நேரும்? 'இது காரணமாக நீ இறப்பின் என்னுயிரும் உடன் போகக் கடவதாக' என்றும், 'நாமிருவரும் சேர்ந்து வாழாது பிரிந்து ஒருவராக வாழ்வதினும் இறப்பதே நலமென்றும்' கூறுமாறு காண்க"

தொடரும்

7. குறுந்தொகை; பாட்டெண் : 56
8. நற்றிணைக்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை.

தமிழில் காலமும் தொடர் நிலையும்

எஸ். ஆரோக்கியநாதன்,

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் மைசூர்-6

தமிழில் காலத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவை நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்பனவாகும். பெரும்பாலான வினைச் சொற்கள் காலத்தைக் காட்டி நிற்கின்றன. மேலும் அவைகள் வேற்றுமை உருபு ஏற்று வருவதில்லை. வினைச்சொற்கள் குறிக்கின்ற காலம் பேசப்படுகின்ற பொழுதினை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றன. பேசப்படுகின்ற பொழுதுக்கு முந்தியது இறந்தகாலம் எனவும், பிந்தியது எதிர்காலம் எனவும், பேசப்படும் காலப் பொழுதினை ஒட்டியது நிகழ்காலம் எனவும் பெறப்படுகின்றன. காலத்தைக் குறிக்கப் பயன்படும் வினைச் சொற்கள் கால மயக்கம் பெற்று வருகின்றன. அதாவது, நிகழ்கால வினைச் சொற்கள் சிற்சில சமயங்களில் எதிர்கால நிகழ்ச்சி அல்லது நிலைகளைக் குறிக்கப் பயன்படுகின்றன.

நிகழ்காலம், இமைப் பொழுது நடக்கின்றன. நிகழ்ச்சியினைக் குறிக்கவும், பொதுண்மைகளைக் குறிக்கவும், முக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் பழக்க நிலையினைக் குறிக்கவும், பயன்படுவதாக பொருண்மையியலார் குறிப்பிடுவர்

இமைப் பொழுது நடக்கின்ற நிகழ்ச்சியாக நிகழ்கால வினைச் சொற்கள் பயன்படும்போது, நிகழ்ச்சி அல்ல செயல் பேசும் பொழுதினில் நடந்தேறி விடுவதாக உணரப்படுகிறது. இது பெரும் பாலும், பேச்சு மொழியில் (Colloqnial speech) நிகழ்ச்சி அல்லது செயலினை விவரிக்கவோ அன்றி விமர்சனம் அல்லது வர்ணனை செய்திடவோ பயன்படுகிறது. சான்ருக, தலைவர், கூட்டத்துக்கு வருவதனைத் தொண்டர்கள், ''தலைவர் வருகிருர் தலைவர் வருகிருர்'' என்று குரல் கொடுப்பது தலைவர் வருகையினை வர்ணனையாக கூறுவதாகும். அவ்வாறே.

1) அ) வானம் மின்னுகிறது.

ஆ) இக் குழந்தைக்கு அம்மு என்று பெயரிடுகிறேன்

எனும் வாக்கியங்கள் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு விளக்கமாக அமைகின்றன.

முக்காலத்திற்கும் பொருந்தும் பொதுண்மைகளைக் கூறவும் நிகழ்கால வினைச் சொற்கள் பயன்படுகின்றன:

2) அ) சூரியன் பூமியைச் சுற்றுகிறது.

ஆ) கோவிலில் தெய்வம் இருக்கிறது.

எனும் மேற்கூறிய வாக்கியங்கள் எந்தக் கால நிலைக்கும் உட்படாது முக்காலத்துக்கும் பொருந்தி வருவதாக அமைந்துள்ளன. ஆனால் ஒரு நிகழ்ச்சி அல்லது செயல் முக்காலத்துக்கும் பொருந்துவதாக அமையாது, இறந்தகால அடிப்படையிலும், நிகழ்கால அநுபவத்திலும், அமையப் பெற்று பழக்க நிலையினைக் கூறுவதாக அமையலாம். பழக்க நிலையினை உணர்த்தும் போது கடந்த காலத்து அநுபவம் அடிப்படையாக அமைய வேண்டும் என்பது கட்டாயமில்லை, பழக்க நிலையினைக் குறிக்கும் நிகழ்கால வினைச்சொற்களைக் கொண்ட வாக்கியங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

3) அ) அவர் அரிசி வியாபாரம் செய்கிறார்.

ஆ) அவள் காலையில் பழையசாதம் சாப்பிடுகிறாள்.

நிகழ்கால வினைகள் உறுதியாக எதிர்காலத்தைக் குறிக்கவும் பயன்படுகின்றன.

4) அ) நாளை முதல்வர் டெல்லி செல்கிறார்

ஆ) இன்று மாலை கூட்டத்தில் தலைவர் பரிசு வழங்குகிறார்.

பொதுவான பேச்சு வழக்கில், உறுதியாகக் கூறமுடியாத எதிர்கால நிகழ்ச்சிகளைக் குறிக்க நிகழ்கால வினைகள் பயன்படுவதில்லை, சான்றாக.

5) அ) நாளை உனக்குக் காய்ச்சல் அடிக்கிறது.

ஆ) அவனுக்குத் திங்கட்கிழமை குழந்தை பிறக்கிறது.

எதிர்கால வினைகள் பொருண்மையியல் பார்வையில் சிற்சில சமயங்களில் கர்த்தாவின் (subjeet) பண்பினை/இயல்பினை குறிக்கவும் பயன்படுன்றன.

6) அ) நெருப்பு சுடும்

ஆ) தண்ணீர் பள்ளத்தில் பாயும்

இ) ஆடு புல்லைத் தின்னும்.

இவ் வாக்கியங்களில் நெருப்பின் சுடுகின்ற இயல்பும், தண்ணீரின் (பள்ளத்தை நோக்கி) பாய்கின்ற இயல்பும், ஆட்டின் 'புல்லைத், தின்கின்ற இயல்பும், குறிப்பிடப்படுகின்றன. 'ஆடுபுல்லைத் தின்னும்' என்று கூறும் போது ஆடு, தின்பதாக இருந்தால் அது புல்லைத் தின்னும், என்ற பொருளே தவிர, ஆடு எப்போதும் புல்லைத்தின்று கொண்டேயிருக்கிறது என்றுதொடர்நிலையில் பொருள்

பெறப்படுவதில்லை. அதனால்தான் சூரியன் பூமியைச் சுற்றும் என்னும் வாக்கியம் இலக்கண அமைபிதிழந்துவிட, சூரியன் பூமியைச் சுற்றுகிறது எனும் வாக்கியம் முக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் பொதுண்மைப் பொருளில் இலக்கண வாக்கியமாக அமைகிறது. மேலும், தண்ணீர் பள்ளத்தில் பாய்கிறது. ஆடு புல்லைத் தின்கிறது எனும் போது நடக்கின்ற நிகழ்ச்சியின் நிகழ்கால விளக்கமாக வர்ணனையாக வாக்கியங்கள் அமைகின்றனவே யொழிய கர்த்தாவின் இயல்பினைக் குறிப்பதாக அமைவதில்லை.

7, (அ) அவன் நன்கு குடிப்பான் எனும் எதிர்கால வினை கொண்ட வாக்கியம் ஒருவனின் பழக்கத்தைக் கணிப்பதாக அமைகிறது ஆயினும் எதிர்காலத்திலும் அவன் குடிப்பான் என்று கூறுவதற்கில்லை அவன் நன்கு குடிக்கிறான் எனும் போது தற்போதுள்ள நிலையினைச் சொல்வதோடு அந்நிலை கடந்தகால அனுபவத்தால். நிகழ்காலத்தில் சற்று ஸ்திரப்பட்டிருப்பதாக உணரப்படுகிறது. அவன் நன்கு குடிப்பான் எனும் போது கடந்த கால அனுபவத்தால் ஒருவனின் பழக்கத்தைக் கணிப்பதாகவே அமைகிறது

இறந்த காலம் பேசப்படுகின்ற பொழுதுக்கு முந்தியது என்றாலும் இறந்த கால வினைச் சொல், குறிப்பாக நிகழ்ச்சி வினை (verb referring to an event or action) பெரும்பாலும் செயலின் முடிந்த நிலையாக இருப்பதில்லை.

8. (அ) நான் சுவரில் ஆணி அடித்தேன்.
(ஆ) ராமன் வில்லை வளைத்தான்.
(இ) அவன் கல்லைப் புரட்டினான்.
(ஈ) அவன் காப்பி ஆற்றினான்.

மேற்குறிப்பிட்ட வாக்கியங்கள் இறந்த காலத்தைக் குறிப்பன. ஆயினும், இவ்வாக்கியங்களிலிருந்து நிகழ்ச்சி முழுதும் நடந்தேறி விட்டதாக முற்று பெற்ற நிகழ்ச்சியாக உணர முடிவதில்லை.

9. (அ) நான் சுவரில் ஆணி அடித்தேன், ஆனால் ஆணி இறங்க வில்லை.
(ஆ) ராமன் வில்லை வளைத்தான்; ஆனால் வளையவில்லை.
(இ) அவன் கல்லைப்புரட்டினான்; ஆனால் அது புரளவில்லை.
(ஈ) அவன் காப்பியை ஆற்றினான்; ஆனால் அது ஆறவில்லை

மேற்கூறிய வாக்கியங்கள், நிகழ்ச்சிகள் நடந்தனவேயொழிய ஆயினும் முடிவு பெற்றிடாது, முயற்சியாகவே இந்த இறந்த கால நிகழ்ச்சிகள் இருப்பதைப் புலப்படுத்துகின்றன. ஆனால் நிலையினைக் குறிக்கும் வினைகளைக் கொண்ட இறந்த கால வாக்கியங்கள் நிகழ்ச்சிகளைக்குறிக்கும் இறந்த கால வாக்கியங்களைப் போலல்லாது முடிவு பெற்ற நிலையில் விளங்குகின்றன.

(தொடரும்)

10. (அ) (1) நேற்று கூட்டம் முடிந்தது.

(2) நேற்று கூட்டம் முடிந்தது; ஆயினும் தலைவர் பேசிக் கொண்டிருந்தார்.

(ஆ) (1) இட்டிலி ஆறியது.

(2) இட்டிலி ஆறியது; ஆயினும் சூடு குறையவில்லை.

இறந்தகால நிகழ்ச்சியினைக் குறிக்கின்ற வினைச் சொற்களோடு விடு எனும் வினைச் சொல் துணை வினையாக (auxiPiary verb) வரும்போது நிகழ்ச்சி முற்றுப்பெற்ற நிலையில் அமைந்து விடுகிறது.

11. (அ) (1) நான் ஆணி அடித்துவிட்டேன்.

(2) நான் ஆணி அடித்து விட்டேன்: ஆயினும் ஆணி இறங்கவில்லை:

(ஆ) (1) ராமன் வில்லை வளைத்து விட்டான்.

(2) ராமன் வில்லை வளைத்து விட்டான்; ஆயினும் அது வளையவில்லை.

இறந்தகால வாக்கியங்களில், இறந்த காலத்தின் ஒரு நிகழ்ச்சி அல்லது, நிலையினைக் குறிப்பிட பெரும்பாலும் காலவினையைப் பெற்று அமைகின்றன. அவ்வாறு காலவினையைப் பெருதஇறந்த கால வாக்கியங்கள், பேச்சுத் தொடரின் (discourse) துவக்கத்தில் பொருத்தமானதாக அமையவதில்லை. சான்ருக

12. (அ) (1) நேற்று நான் ஊருக்குப் போனேன். அங்கே இந்தப் புத்தகத்தை வாங்கினேன்.........

இறந்தகாலம், நிகழ்கால·், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் நடக்கின்ற நிகழ்ச்சி கால அளவில் நீண்டு அமைந் திருந்தால் அதனைத் தொடர்நிலை என்று குறிப்பிடுகிறோம்.

(2) நான் ஊருக்குப் போனேன், அங்கே நேற்று இந்தப் புத்தகத்தை வாங்கினேன்.........

தொடரும்

குறள்நேறி விளக்கம்

செஞ்சொற்ப் பாவளர்
ப. சங்கரலிங்கம்
மதுரை

10 அறந்திளைத்தார் ஆள்நெறியர் ஆண்டிடுவார் தம்மை
உரைக்கும் உயர்வாய் உலகு!

உரை:- அறநெறியில் திளைத்தவர்களையும், உயர்ந்த நெறியினைக்கைக் கொள்வாரையும் உலகு உயர்ந்தோராய் ஏத்தும்

விளக்கம்;- உலகு என்றது ஈண்டு உலகத்தவரை உயர்ந்தோர் இவர் என்றுர்.

ஒப்புமை:- "திருவும் இன்பமும் சிறப்பும் புகழும்மற்
றெருருவராக் கலும் நீக்கலுமுள்ளவோ
மருவும் புண்ணிய மாந்தர்க் கிவையெலாந்
தருமம் இன்றெனிந் தாமே சிதையுமால்" சேதுபுராணம்
"தனக்குக்கரிதான் செல்லுலகத்தறம்,, நான்மணிக்கடிகை
"உள்ளங்கனிந் தறஞ்செய்துய்கவே,,— நன்னெறி
"சிறப்பினும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்க,, —குறள்—311
"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல,,——குறள்—39
"அருள்தரும் திறத்து அறனன்றிவலியதுண்டாமோ
கம்பரா மா கான்வனத—88
"மூன்றுலகிற்கு மாக்சிமுடிவிலாத்தன்மைநல்கும்
ஆன்றநல் அறத்தைப்போலும் அறியதொன்றில்லை
என்றுர்— மேருமந்திரபுராணம் 117
" உருவமும் அழகு நல்லுனியுங் கீர்த்தியும்
செரு இடைவெல்வத்திறலும் சிந்தனைசெய்
பொருளவை வருதலும் போகலும் நல்ல
திருவுடையறத்தது செய்கை என்றனள்
மேருமந்திரபுராணம் —44

"ஐவகைப் பொறியும் வாட்டி ஆமையின் அடங்கி
ஐந்தின் மெய்வகை தெரியும் சிநதை விளக்கு நின்
றெறிய விட்டு பொய் கொலை களவு காமம் அவா
இருள் புகாது போற்றி செய்தவம் நுனித்த சீலக்கனை
கதிர்த்திங்க ளொப்பார்' —சீவக
அருந்தவர் போன்றுகாத்தும் அடங்கலால் ஆமை
போன்றும் ஊ — 1859

11 "மெய்யுணர்ந்து மெய்நின்ருர் மேன்மையர்மற்றையோர்
பொய்யுணந்தார் புன்மையர் தாம்"

உரை :- மெய் பொருள் இயல்பையுணந்து மெய்யாய வழிகளி லே நின்றவர் மேன்மையர் ஆவர், பொய்யிலே உழன்ருர்கள். புன்மையர் எனக்கூறப்படுவர்.

விளக்கம்:- மெய்நின்றலாவது உலகிற்கு நலம் பயப்பவற்றின் உண்மையைத் தெளிந்த மெய்யுணர்ந்தோர் உணர்த்திய ஒழுக்கநெறியில் நிற்றல். இதற்கு மறுதலே பொய்யுணர்ந்தோர் நெறியாகும். மெய்யுணர்ந்தார் மேன்மையும் பொய்யுணர்ந்தார் புன்மையும் கூறினர்.

ஒப்புமை:- சார்புணர்ந்து சார்புகெடவொழுகின் மற்றழித்துச்
சார் தரா சார் தரு நோய்' —குறள்—359
சாறயர்ந்து இறைவற் பேணிச் சார்பறுத்து உய்தி
யென்று கூறினேன். சீவக—1221
" சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் என்றமையாவ்
சார்புணர்தல்தானே தியான முமாம்— சார்பு
கெட ஒழுகின நல்ல சமாதியுமாம் தேகம்
பட வருவதில்லே வினைப்பற்று —திருக்களிற்றுப்
பாடியார் 34—

12 ஒர்ந்துணர்ந்து வுண்மைதனே உண்மையென்ருர் நல்
லோர்: அத்தேர்ந்தாரை மெய்ப் பொருள் தேடும்

உரை,- தேர்ந்து தெளிந்து தான் உலகில் கண்ட உண்மைதனே உண்மையென்று கூறியவர் நல்லோர்களாவர் அத்தகைய நல்லோரை மெய்யாகிய பொருள் தேடிச்சாரும்.

விளக்கம்.- உண்மைதனே உண்மையன்று உரைத்தலாவது உள்ளத்தில் பட்டவற்றை வேண்டியார் வேண்டாதார் எனப்பாருது நடுநிலமையுடன் கூறல் மெய்பொருள் தேடுதலாவது அத்தகையோர்யாண்டு உளர் என அவர் சொல்லும் வழியெலாம் நுழைந்து தேடல்

ஒப்புமை;- "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலேப்படுவர்
மற்றீண்டு வா ரா நெறி" — குறள் — 355

13 கூரையிலா வீட்டில் குடிபுகும் மாரி போல்
தேர்விலகம் போமே அவர்"

உரை:- கூரை நன்கு வேயப்படாத வீட்டில் மழையானதுபுக்கு ஆண்டுள்ளாரை நனைக்கு மாப்போல தேர்வற்ற நெஞ்சினை உடையாரிடத்தே அவா புகும்

விளக்கம்:- மாரிபுகுதலோடன்றிச் சுவரை நனைத்து ஆண்குள்ளாரையும் வீழ்த்தளத்தனிக்கும் அதனுல் ஆண்டு உறைவார்க்கு எப்போது இடுக்கண் உறும் எனக் கூற வியலாது. எனும் பொருளெல்லாம் உட்கொண்டு குடி புகும் மாரி போல் என்றுர். அவா நுழைதலாவது அவா வானது அகத்தைக்கெடுத்து அவன் வினைகளை அழிக்குங் காலம் நோக்கும் என்பதாம். சுவர் எப்போதாவது விழ்தல் போல் அவனும் என்ருவது ஒர்நாள் வீழ்வன் என்பது தேற்றம்.

ஒப்புமை: நனை சுவற்துரைக்கணை குறற்பல்லா—சத்திமுற்றபுலவர்
ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனுடாயினும் ஆசையறுமின்கள்
ஆசைப்படப்பட ஆய்வருந்துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்தமாமே — திருமந்திரம்
அற்றது பற்றெனின் உற்றது வீடு — திருமந்திரம்
ஆசைக்கோரளவில்லை அகிலமெல்லாங்கட்டி ஆளினும் கடல் மீதிலே ஆணை செலவே நினைவர் அளகே சனி கராகர் அம்பொன் மிகவைத்தபேரு.
நேசித்துரசவாத வித்தைக் கலைந்திடுவர் நெடுநாளிருந்தபேரு நிலையாகவேயினுங்காய கற்பந்தே நெஞ்சுடி புண்ணுவராரெல்லாம்
"மோகமே திரியக்கிடையுப்பது—"தாயுமானவர்"
மோகமே நரகத்தில் விழுப்பது
மோகமே மறவது மற்றவும்
மோகமே பறமாசறநிற்பதும் — மேருமந்தபுராணம்
அவாவெனப வெல்லாவுயுர்க்க மெஞ்ஞான்றும் ஆர்வ
வேர்சுரிந்துதவாப் பிறப்பீனும் வித்து" — குறள் 362
சீவ 409 பாகவதம் 1—2

14:- தீவினை தீ துய்க்கும் தீதவித்தான் ஓகைபெற்றுக்
காவென வாழ்வன் கனிந்து"

உரை:- தீயவினைகள் தீமையைப பயக்கும் அத்தீதனைத்தவிர்த்
தவன் மகிழ்வுச்சோலையை இனிதாகத் துய்ப்பன்

விளக்கம்:- தீவினை தவிர்க்க என்றார்

ஒப்புமை:- "தீயவை தீய பயத்தலாற் தீயவை
தீயினும் அஞ்சப்படும்" — குறள் 202
இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றுப் பெயர்த்து — குறள் 205

15:- "தீவினையன்மும்மையும் தீப்புழுப்போல் கேடுறுவன்
தேனுகாவன் நல்வினையன்தான்"

உரை;- தீய வினையினைச் செய்பவன் தீயிலே பட்ட புழுவினைப்
போல் மூன்று காலத்தினும் கேட்டினை எய்துவன் நல்
வினையினை செய்பவன் தேனொத்த இன்பத்தை எய்து
வன்

விளக்கம்:- மும்மை என்பது இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும்
மூன்று காலமாம்

ஒப்புமை:- தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப்படும்" — குறள் — 202
"செய்ததன் பயன் பற்றுவிடாது — கலி 59 — 25
"சூம் வாய்த்த மனத்தவன்வினைபொய்ப்பின் மற்றவன்
வான்வாய் நன்றுயினும் அஃதெறியாது விடாதேகாண்
ஹ—149—10—11 ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்
என்பதூ உம் சிலப்பதி—57
உம்மை வினைவந்து உருத்தல் ஒழியாது-ஒழியாது-
மணி-வஞ்சி -32
"வினைகளின் விளைவை யாவர் விளக்குநர் என்று நின்
ருன்"-யசோ-
"வெல்வதற்கரிதால் வினையின் பயன் - ஹ 170, 144
உயிர் புகும் சட்டகம் ஊழிதொறும்
புழுவினை புகுந்த பாடகம் போல—கல்லா 11-1-2
ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது,-இறை·சூ-
உ-உரை வேண்டினும் வேண்டா விடினும் உற்றபால
தீண்டா விடுதலாது-ஹ-109-

கசா "பிறராவைத் தாணென்பார் போன்ருர் பல கற்றும் கற்றதனைக் கைக் கௌளார் தாம்',

உரை:- மற்றவர்களுடைய பசுக்களைத்தன தென் கும் ஆய போல்பல அறிவுநூல்களைக் கற்றும் அவற்றைவாழ்வில் ஏற்று நடக்காதார் வாழ்வில் உயர் வின்றிக்கொன்னே அழிகின்றுர்.

விலக்கம்.- ஆக்கள் மேய்க்கப்படும் போழ்து ஆயனுக்கடங்கி நடப்பினும் அவன் உரிமைகொண்டாடினும் அவனுக்கு அவை பயன் படாப் போல், பல நூல்கள் தனக்கே உரித்தாகக் கொண்டும் ஒயாது நூல்ஒதினும் அதன்படி நட வாவனுக்கு அந்நூல்களால் பயன் இல்லை எனருர்

ஒப்புமை:- உலகத்தோடொட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலார், — குறள் 140—
சொல்லற்க சேர்ந்தார் புலம் புறச் செல்லாது
நில்லற்க நீத்தார் நெறியொரீஇய்—பல்காலும்
நாடு தான் கண்ட துட்பத்தைக் கேளாதே
ஒடுக ஊரோடு மாறு'—டமுமொழி 392—

க.எ "அறநெறியன் நல்வினையன் ஆழ்ந்த கன்றுகற்கிலனும் நற் பயனைத்துயத்திடுவன் நன்கு?

உரை;- அறநெறியின்படி ஒழுகுபவனும், நல்ல வினைகள் செய்பவனும் ஆகிய ஒருவன் நூல்களை ஆழமாகவோ. அகலமாகவோ, ஊன்றிக்கற்காது போயிடினும், தன் வொழுக்கமே பாட்டால் நல்வாழ்வையடைவானும்

விளக்கம்:- தாயுமானவர், வள்ளலார், நம்மாள்வார்இராமகிருட்டினர் போன்றோர் ஒதரதே உயர்நிலை அடைந்தவராவர். அவரைப் போல்வூவர் என்பது குறிப்பு பண்பால் சிறப் பெலாம் அவரை நாடி வரும் என்றுர்

ஒப்புமை:- பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்—குறல் 215
நன்னிலைக்கண் தன்னை றுறுப்பானும் தண்ணை
நிலை கலங்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறப்பானும் தன்னைத்
தலையாகச்செய்வானும்தான்—நாலடி—248

தமிழ் மனம் பரப்பிய சேதுகாவலர்

செந்தமிழ் வளர்த்த சேதுகாவலர் பலர். அவர்கள் தமிழுக்கும் இந்து சமயத்திற்கும் செய்த தொண்டுகள் பலப்பல. நான்காம் தமிழ்ச் |சங்கத்தின் புரவலர்களாயிருந்து தமிழகத்தில் தமிழ் மணம் பரப்பியவர்கள் இச்சேதுகாவலர்கள். அவர்களில் பலர் நாவன்மை படைத்த நற்றமிழ்ப் புலவர்களாய் விளங்கினர். அவர்களுள் ஒருவர் மாட்சிமைமிகு முத்துராமலிங்க சேதுபதி அவர்களாவார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மாட்சிமை தங்கிய முகவை மன்னர் அவர்களின் பாட்டனாரும் தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவர் திரு மிகு. காசிநாததுரையவர்களின் தகப்பனாரும் ஆவர். அன்னார் செய்யுள் இயற்றுவதில் சிறந்தவராக விளங்கினார். பல்வேறு சூழ் நிலைகளில் பாடப்பட்ட பாடல்கள் பல. உவப்பளிக்கும் உவமை களும், கருத்துக்கினிய கற்பனைகளும், அழகு செய்யும் அணி நயங்களும், நகைச்சுவையும் அவரது பாடல்களில் மிளிர்வதைக் காணலாம். அவற்றுள், அவரது நாவன்மைக்கு உரைகல்லாய் அமைந்த பாடல்கள் சிலவற்றைச் செந்தமிழ் இதழில் வெளியிடு வதில் பெருமைப்படுகிறோம். அவரது புலமையைத் தமிழன்பர்கள் சுவைத்து இன்புறுவார்களாகுக.

1. திரு. இராகவையங்கார் அவர்கள் கொடுத்த "செந்திரு மார்பன்" என்ற தலைப்பிற்கு மூன்று நிமிடத்தில் பாடிய கலித் துறைப்பாடல்:

"செந்திரு மார்பனைச் சீராமன் றன்னைச் செகம்புகழும்
பைந்தருச் சோலைப் பதிவளர் பங்கயப் பாதத்தனைச்
சிந்தனை செய்திடிற் செல்வமுங் கல்வியுஞ் சேர்வதுடன்
மைந்தரும் மாசற்ற வாழ்வுங் கிடைக்குமிம் மாநிலத்தே".

2. 1909ஆம் ஆண்டு மாண்பு தங்கிய அரசர் அவர்கள் இராமேசுவரத்தில் திருக்கல்யாண சமயத்திற் பாடியது.
இரு ஒரு விகற்ப நேரிசை வெண்பா:

"நல்ல கதியடையும் நாட்களிலே செய்ததவம்
மெல்லமெல்ல நற்பயனை மேவுமே—தொல்லுலகிற்
பல்லோர் துதிக்கும் பருவதரா ஜன்புத்ரி
கல்யாணத் தைக்கண்ட கண்"

3. பாண்டி நாட்டுச் சிவஸ்தலங்கள் பற்றிய வெண்பா:
"கூடல் பரங்குன்றம் குற்றாலம் நெல்வேலி
ஆடானை புத்தூர்நல் லாப்பனூர்—ஏடகமே
பூவணம்கா னப்பேர் புனவாசல் நற்சுழியல்
தேவைகொடுங் குன்றமெனத் தேர்"

ஆர். காசிநாததுரை

— இன்னும் வரும்

அண்ணாமலை பல்கலைக் கழகம் தமிழ்த்துறை

இலக்கிய சுற்று - 4

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை, இவ்வாண்டு இலக்கியச்சுற்று என்று புதிய திட்டமிட்டுத் திங்கள் தோறும், இச்சுற்றுக்கூட்டத்தினை நடத்தி வருகிறது. பழம் புலவர்களையும் இந்நூற்றாண்டுப் புலவர்களையும் பொதுமக்கட்கும் மாணவர்கட்கும் அறிமுகப்படுத்துவது இச்சுற்றின் நோக்கமாகும்

சாத்தனார், கம்பர். சேக்கிழார் என்ற பழம்புலவர்களும் டாக்டர் உ. வே சா, திரு. வி. க., மறைமலையடிகள் என்ற தற்காலப் புலவர்களும் இதுவரை அறிமுகப் படுத்தப்பட்டனர் இலக்கியச்சுற்றின் நான்காவது கூட்டம் 31—12—76இல் நடைபெற்றது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி என்ற தலைப்பில் பேசிய திரு. செ வேங்கடராமச் செட்டியார், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று உலகப் பொதுமை பாடிய கனியன் பூங்குன்றன் பிறந்த மகிபாலன் பட்டியில் பிறந்தவர் என்றும் வடமொழிப் புலவோரும் மதிக்கும்படி வடமொழியை, ஆழக்கற்று பொருள்நூல், நாடகநூல் முதலியவற்றை மொழி பெயர்த்துத் தமிழ்த் தொண்டு செய்தார் எனவும், பிறரைக் கவரும் இனிய உரையாடலில் வல்லவர் எனவும், அரிய இலக்கணங்களையும் இலக்கியம் போல் பாடம் சொல்ல வல்லவர் எனவும் எடுத்துரைத்தார்.

திரு சுப. இராமநாதன் கொங்குவேளிர் என்ற பொருள் பற்றிக் கூறுங்கால், கிடைத்த இரு ஏடுகளைக் கொண்டு டாக்டர் உ. வே சா, பெருங்கதையைப் பல குறிப்புக்களோடு வெளியிட்-

டனர் எனவும், பிற காப்பியங்கள் போலப் பெருங்கதை பரவாமைக்கு, ஒரே வகை யாப்பில் எழுதப்பட்டது, சிக்கலான கதையமைப்புடையது, நூல் முன்னும் பின்னும் இல்லாக் குறைபாடுடையது. என்ற காரணங்களாக இருக்கலாம் எனவும், இந்நூல் ஏனைக் காப்பியங்கள் போல வகுப்புக்குப் பாடமாக வைக்கப்பட வேண்டுமெனவும் ஆய்வுக் குறிப்புக்களோறு பேசினர்.

டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையுரையில் செய்யுட்களைச் சொல்தோறும் ஆழ்ந்து பார்த்துப்பதம் பதமாக நயங்கூறும் திறத்தை இலக்கிய உலகில் பரப்பியவர் பண்டிதமணி எனவும், தமிழ்க் காப்பியங்களுள் பெருங்கதை ஒன்று தான் சூழ்ச்சியும் அரசியல் இலக்கணங்களுடைய காப்பியம் எனவும் விளக்கிக் கூறினர்.

திருத்தம்:

தொகுதி 71 பகுதி4ல் 'வாலி வதைப் படலம்' பாடல்கள் ஒப்பாய்வு என்ற கட்டுரையில் 7வது பக்கத்தில் '138ஆம் பாடலில் அங்கதன் அடைக்கலம் தருதல் என்ற தலைப்பில் அமைந்துள்ள பாடல் அடியையும் சிறிது உன்னிப் பார்க்கவேண்டும் என்ற பத்தியை வாலி சுக்கிரீவனை அடைக்கலம் தருதல் என்ற தலைப்பில் அமைந்துள்ள பாடலடியையுச் சிறிது உண்ணிப் பார்க்கவேண்டும்' எனத்திருத்திப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிழைக்கு வருந்குகிறேன். கட்டுரை ஆசிரியன்.

சங்கச்செய்திகள்

தமிழ்நாடு திட்டக்குழு துணைத்தலைவர் தமிழ்ச் சங்கம் வருகை

12—1—77ஆம் நாள் மாலை 3மணியளவில் தமிழ்நாடு அரசு திட்டக்குழுத்துணைத்தலைவர் மாண்புமிகு. வீ. இராமையா அவர்கள் மதுரைத்தமிழ்ச் சங்கத்திற்கு வருகை தந்தார்கள் தமிழ்ச்சங்கம் சார்பாக செயலாளர் திருமிகு டி பி. எம். பெரியசுவாமி அவர்களும், செந்தமிழ்க் கல்லூரி சார்பாக தாளாளர் திருமிகு தனுக்கோடி பாண்டியன் அவர்களும் வரவேற்று மாலை அணிவித்தார்கள். சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள். க. கந்தசாமி பி, ஏ பி. எல, து. ஆ. தேவசிகாமணி பி. ஏ. பி. எல் மா. சங்கரபாண்டியன் பி. ஏ. பி. எல், அ. ஆண்டியப்பன், பரசுராம் ஆகியோர்களும்; கல்லூரி முதல்வர் திரு ஆர். நாராயணன் அவர்களும், ஆசிரியர் பெருமக்கள் அனைவரும் சிறந்த முறையில் வரவேற்றனர்.

கல்லூரி மாணவ, மாணவிகள் அனைவரும் அணிவகுத்து வரவேற்றனர்.

மாண்புமிகு இராமையா அவர்கள் தமிழ்ச் சங்கத்தையும் கல்லூரியையும் பார்வையிட்டார். பாண்டியன் நூலகம் பழந்தமிழ் இலக்கிய ஏடுகள் அனைத்தையும் பார்வையிட்டார்கள்.

தமிழ்ச்சங்கத்தின் கடந்தகால வரலாற்றினையும் இன்றைய நடைமுறைகளையும் கேட்டறிந்து பின்வரும் ஆய்வுரைகள் வழங்கினார்கள்.

1. தமிழ் மொழி, வரலாறு, இலக்கியம் சரித்திர முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சிகளையும் பெரியோர்களையும் பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி செய்ய ஒருதனித் துறை அமைக்க வேண்டும் என்றும், அதற்கு ஆலோசனை வழிவகைகளைச் சொல்லுவதற்கு மாநில அளவில் தமிழ் அறிஞர்கள் கொண்ட ஒரு குழு அமைக்க வேண்டுமென்றும் கருத்துரை கூறினர்கள்

2. தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தற்சமயம் அரசாங்கம் செய்துவரும் உதவிகளை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

மாண்புமிகு இராமையா அவர்களுடன் மதுரை மாவட்ட காங்கிரஸ் தலைவர் திரு சி. பி. வி இராஜு அவர்கள் காங்கிரஸ் பிரமுகர்கள் திரு பி வி. இராஜு. திரு சந்தானகிருஷ்ணக் கோனார் திரு. வேலாயுதம், திரு. பெரியசாமி மற்றும் பலர் வருகை தந்தனர்.

டி. பி. எம். பெரியசுவாமி
செயலாளர்

இரங்கற் செய்தி

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் மாணவரும், மதுரை புனித தூசையப்பர் உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியரும் ஆகிய வித்துவான் திரு எஸ்: ஆழ்வார் ஐயங்கார் அவர்கள் கடந்த 20—12—76 அன்று மறைந்தமை கேட்டு மிகவும் வருந்துகின்றோம். ஐயங்கார் அவர்கள் தமிழ்ச் சங்கப் புலவர், அஞ்சல்வழிக் கல்வித்துறையில் பணிபுரிந்து தமிழுக்கும், தமிழ்ச் சங்கத்தின் முன்னேற்றத்திற்கும் ஆற்றிய பணிகளை மறக்கவியலாது. மேலும் செந்தமிழ் இதழில் கட்டுரை பல வடித்துக் கொடுத்தவர். உண்மை, உழைப்பு, இன்சொல் ஆகிய குணங்கள் வாய்க்கப்பெற்ற அவர் தம் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

டி. பி. எம் பெரியசுவாமி
செயலாளர்

சிறுவரைப் பயந்த செம்மலோர்

அருட்கவி கு. செ. இராமசாமி எம். ஏ,
சிவகங்கை

மக்கட் பேறு

பேறுகளுள் தலையாயது மக்கட்பேறு. இது இல்லறவாழ்வின் பயனாக அமைவது மக்கட்பேற்றின் இன்றியமையாமை நோக்கியே வள்ளுவப் பெருந்தகையாரும்,

"பெறுமவற்றுள் யாம்அறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே(று) அல்ல பிற"

என்று பாடினார். பிறந்த மக்கள் அறிவால் சிறந்த மக்களாக விளங்குவார்கள் என்றால் அதைக்காட்டிலும் பெருமைதருவது வேறு இல்லை.

மக்கட்பேற்றின் சிறப்புக்களைப் பாண்டியன் அறிவுடைநம்பி மணக்கும் கவிதையாக்கியுள்ளான். உலகத்துச் செல்வம் அனைத்தையும் ஒருவன் பெற்றிருக்கலாம்; பல்லாயிரம் மக்களோடு பகிர்ந்துண்ணும் மனவளம் உடையவனாகவும் வாழலாம். ஆனால் மழலைப் பேச்சாலும், மனங்கவரும் விளையாட்டுக்களாலும் மகிழ்ச்சியூட்டவல்ல மக்கட்பேறு பெறாதவன் பிறவிப்பயனையே இழந்தவனாகின்றான்:

''படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே"

—புறநானூறு-188

புதல்வரைப் பெறாதோர்

அருமையும் பெருமையும் உடைய மைந்தன் இருமையும் உதவுபவன். 'புதல்வன்' என்ற வடசொல் 'புத்' என்னும் நரகம்

புகாதவாறு பெற்றோர்களைக் காப்பவன் என்றும் பொருளுடைய தாகக் கூறுவர். 'மைந்தன்' என்ற தமிழ்ச்சொல்லோ குடும்பத் திற்கு வலிமையாகவும், பற்றுக்கோடாகவும் திகழுபவன் என்ற பொருள் தந்து நிற்கும். எனவே மைந்தனை இழப்பவன் அனைத் தையும் இழந்தவனே 'சேயோடு தான்பெற்ற செல்வமும் போம். என்ற அவ்வையார் வாக்கு இதனைச் செவ்வையாக விளக்கும்

மக்கள் தொகைப் பெருக்கம் உலகநாடுகள் அனைத்திலுமே பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. அளவான குடும்பமே வளமாக வாழஇயலும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. தட்டுப் பாட்டை ஒழிப்பதற்காக நமது அரசு குடும்பக் கட்டுப்பாட்டை வற்புறுத்தி வருகின்றது ஆனுல் மக்கட்பேறு வாய்க்காத குடும் பங்கள் இன்றும் உள்ளன இத்தகைய பெற்றோர்களின் ஏக்கம் எத்தகையது என்பதை நாம் நன்ருக அறிவோம்.

மக்கட்பேறு வாய்க்காத பெற்றோர்களுக்கு அக்காலத் தமிழகம் சில சலுகைகளை வழங்கியது.

ஏர்க்கடமையைப் போலவே போர்க்கடமையையும் சங்க காலத் தமிழ்க்குடிகள் இன்னுயிரினும் மேலானதாக எண்ணி வாழ்ந்தனர் காற்று வந்து மோதுவதால் கட்டித்தொங்க விடப் பெற்ற முழவிலிருந்து ஒருவகை ஓசை பிறக்கும். அந்த ஓசை யைப் போர்ப்பறையாக மயங்கி ஆற்ருது புறப்படுவார்களாம் அக்கால ஆண்மக்கள். 'ஆடவன்' என்ற சொல்லுக்கே வீரன், வெற்றி தேடித் தருபவன் என்ற பொருள்கொண்ட காலமன்ருே அது! கூனும், குறளும் கூடப் போர்க்களத்தைத் தேனும் பாலு மாகக் கருதின. 'வாளே தெய்வமாகவும், வடுவே பிரசாதமாக வும் கருதப்பெற்ற அந்தநாளில் புதல்வரைப் பெருதோர் போர்க் களம்புகத் தேவையில்லை என்று விதிவிலக்குத் தந்தனர்.

"ஆவும், ஆனியல் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடை யீரும், பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வரைப் பெருஅ தீரும்—
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்..."

—புறநானூறு 9.

உலகவாழ்வை நீத்தவர் தென்திசைக்கண் தங்கியிருந்து மரபினர் படைக்கும் சோற்றையும்; நீரையும் உண்டுவாழ்வர் என்பது வழிவழியாக உள்ள நம்பிக்கை. ஆண்மக்களைப் பெறுவதால் ஆகும் அறுதியான பயனும் இதுவே என்பர். புதல்வரைப் பெருதோர் மறுமையில் சோற்றையும் நீரையும் இழப்பதோடு இம்மையில் பேரையும் புகழையும் இழந்தனர்!

கோடிவகைச் செல்வம் குவிந்து கிடந்தாலும் ஓடிவிளையாட ஒரு குழந்தை இல்லாதவனை ஏழையாகவே, எதும் இல்லாதவனுகவே கருதுகிருர் புகழேந்தியார். காதுபெற்ற பயன் கனிமழலை கேட்பதே என்பார் அவர்:

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்(று)
என்னுடைய ரேனும் உடையரோ? — இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லாத வர்."

"சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம்? இன்முகத்து, — முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி."

—நளவெண்பா-246,247

கல்லுக்குள் ஈரம்

பிள்ளைப்பாசம் கயவனையும் நல்லவருக்கும்; இரக்கமில்லாத அரக்கனையும் அது இளகவைக்கும். மகாபாரதம் இதற்குச் சான்று தருகின்றது:

நூற்றுவர் தலைவன் துரியோதனன் கூற்றுவனும் அஞ்சும் ஆற்றல் படைத்தவன். வஞ்சகமும் பொருமையுமே நெஞ்சகமாகப் பெற்றவன். பஞ்சவரை வருத்துவதல்லது கொஞ்சமும் வேறு நினைவில்லாதவன். "ஈயிருக்கும் இடம் எனினும் இப்புவியில் யான் அவர்க்கு அரசு இனிக்கொடேன்" என்று அறிவித்துப் போர்ப்பறை கொட்டியவன்.

பதினெட்டு நாட்கள் பெரும்போர் நடந்து முடிந்தது. இரு திறத்திலும் ஒருதிறமாகப் பேரழிவு ஏற்பட்டது. துரியோதனன் வீமனேடு தனிப்போர் புரிந்து குற்றுயிராக வீழ்ந்தான். ஈயும்

எறும்பும் இவன்மீது ஏறிமேய்ந்தன; நாயும் நரியும் உணவு கொள்ளச் சூழ்ந்தன! இந்த நிலையில் இவனையடைந்த அசுவத்தாமன் பழிக்குப்பழி தீர்த்து வருவதாகச் சொல்லித் துரியோதனன் இசைவுபெற்று வெறியோடு புறப்பட்டான்.

இளைத்தும் களைத்தும் உறங்கிக்கொண்டிருந்த வீரர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் வளைத்து வளைத்துக் கொன்றான். பாண்டவர்களாக எண்ணிப் பாண்டவமைந்தன் ஐவர் தலைகளையும் கொய்தான். கொய்துவந்த தலைகளைத் துரியோதனன் காலடியில் பெய்துநின்றான்.

துரியோதனன் கூர்ந்து நோக்கினான் அசுவத்தாமன் கொண்டுவந்த தலைகள் பாண்டவர்களின் தலைகள் அல்ல, அறிவு வாராத சிறுவர்களின் தலைகள் என்பதை அறிந்தான்.

பகையை மறந்தான். பழிவாங்கும் வெறியை மறந்தான் அன்பும் அறவுணர்வும் மெல்ல மெல்லத் தலைதூக்கின. அழுகையோடும், ஆற்றாமையோடும் புலம்பத் தொடங்கினான்:

"அசுவத்தாமா! இது என்ன ஐயா கொடுமை? அந்தணனாகிய நீ இத்தகைய இழிசெயல் புரியலாமா?"

"அரசர்க்கு அரசர்களை எல்லாம் வெற்றிகொண்ட உன் அம்புகள் அந்தோ, அப்பாவிச் சிறுவர்களின்மேல் தைக்கலாமா? இது வீரமாகுமா? என்ன நினைந்து என்ன செயல் புரிந்தாய்!"

"எனக்கும் இந்தக் குழந்தைகளுக்கும் ஏதேனும் பகையுண்டா? எங்கள் குருகுலத்தின் கொழுந்துகளைக் கிள்ளி விட்டாயே அப்பா!"

"பேர்சொல்ல ஒருபிள்ளை வேண்டும் என்று ஊர் சொல்லுமே! இங்கும் பிள்ளை இல்லை அங்கும் இல்லை என்றாகலாமா?

"பாதகம்செய்கை பார்ப்பன மாக்களுக்(கு)
ஏதம் ஏதம்இது என்செய்த வாறு?"
"துன்று பாரதம் தோன்றிய நாள்முதல்
மன்னர் ஓட மலைந்தனை வாளியால்!
சொன்ன பாலர் மகுடம் துணித்ததின்(று)
என்ன வீரியம்? என்நினைந் தென்செய்தாய்?"

"இருகு லத்தில் எமக்கும் அவர்க்கும் இங்(கு)
ஒருகு லத்தினும் உண்டென இல்லையால்!
குருகு லத்தின் கொழுந்தினைக் கிள்ளினை—
வருகு லத்தொரு மாசறு மைந்தனே!"

—வில்லிபாரதம், சௌப்திக பருவம், 225, 26, 27

அசுவத்தாமன் பிறப்பால் அந்தணன். ஆனல் அந்தணர் ஒழுக்கத்தைக் கைவிட்டு அரச ஒழுக்கத்தை மேற்கொண்டவன். துரியோதனன் ஒரு போதும் இதனைக்குறை சொன்னதில்லை. மாறாகத் தனக்கு வாய்ப்பாகப் பயன்கொண்டான். ஆனல் குரு குலம் கொடியற்றுப் போகும்நிலை வந்தவுடன் கொதிப்படைந்து அதற்குக் காரணமான அசுவத்தாமனை ஏசுகிறன்; சாதியை நினைவூட்டி ஏதுகிறன்.

"குலதருமத்தைக் கைவிட்டவனே! என்முன் நில்லாதே எங்காவது போ தவஞ்செய்து உன்பாவத்தைப் போக்கிக் கொள்."

பழிபாவத்திற்கு அஞ்சாத துரியோதனன் உள்ளத்திலும் பாசவுணர்வு மேலிட்டது பிள்ளைப்பாசம் அறிவுக்கண்ணைத் திறந்தது; தன் வினையே தன்னைச் சுட்டு வருத்துவதாக உணர்ந்து பேச வைக்கின்றது:

"ஆற்றில் நீர்விளை யாடிய நாள்முதல்
காற்றின் மைந்தனே டெத்தனை கன்றினேன்!
சாற்றின் என்வினை தான்என்னை யேசுடக்
கூற்றின் வாய்ப்புகுந் தேற்கென்ன கூற்றையா!"

—வில்லிபாரதம், சௌப்திகபருவம், 228.

செயிர்தீர் காட்சிச் சிறுவன்

சங்ககாலத் தலைமகன் ஒருவன். இல்லறவாழ்வின் இன்பப் பயனுக மைந்தன் ஒருவனையும் இவன் அடைந்தான்., எவ்வாறே அறிவுமயங்கி ஒவ்வாத ஒழுக்கத்தில் ஈடுபட்டான். இல்லாள் அகத்திருக்க இன்னெருத்தியை மணக்கத்துணிந்தான். புத்தாடையும், பூமாலையுமாகத் தேரேறினன். தன்வீட்டு வழியாகவே மண மேடை நோக்கிப் புறப்பட்டான்.

வேறு ஓசைகளை அறிவானோ இல்லையோ தந்தையின் தேரோசையை மைந்தன் நன்றாக அறிந்து கொள்வான். தளர்நடையிட்டு வெளியே வந்த மைந்தனைக் கண்டு தந்தை தேரை நிறுத்தி இறங்கினான். மார்புறத்தழுவி மைந்தனைச் சீராட்டினான். உள்ளே போகுமாறு மைந்தனைப் பணித்து அவன் வெளியே போக எழுந்தான். விடுவானா மைந்தன்? கண்ணைக் கசக்கினான்; தந்தையின் காலைக்கட்டி கொண்டான்!

தன்னை நோவக்கூடாது என்பதற்காக அன்னை மைந்தனை அடிக்கப் புகுந்தாள்

அடிவிழாதவாறு கடுத்து மைந்தனை அணைத்துக்கொண்டாள் தலைமகன் அந்த வேளையில் மணமுழா அழைத்தது! சற்றே குழம்பிய போதிலும் தலைவன்மனம் இப்போது தெளிவுற்றது! அந்த முழவோசையை இழவோசையாகப் புறக்கணித்து, மைந்தனோடும் மனைவியோடும் இல்லம் புகுந்தான்

"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம் தோழி!"

—அக நானூறு,66

இது தலைவி கூற்றாக அமைந்த பாடல் கணவன் தன்னைக் கைவிடலாம்; ஆனால் வேறு ஒருத்தியைக் கைப்பிடிக்கத் துணிந்ததை எந்தப்பெண்ணும் ஏற்கமாட்டாள். இவளோ நீராடும் கண்களோடும், போராடும் நினைவுகளோடும் அதனையும் ஏற்று நின்றாள். சற்றும் எதிர்பாராத முறையில் இவள் துயரம் முற்றும் அகன்றது.

இம்மைக்கும் மறுமைக்கும் உதவியாக அமைபவனே உண்மையான மைந்தன். இவள் குடலை விளங்க வைத்தவன் இன்று குடும்பத்தையும் விளங்கவைத்துள்ளான்.

பகைவரும் குழந்தை முகம்கண்டு பரிவுகாட்டுவர்; பல்லாண்டு பழகிய கணவன் பரிவுகாட்டியதில் வியப்பென்ன?

பரத்தை காரணமாகத் தலைவியைப் பிரிந்தவன் புதல்வனை வாயிலாகக் கொண்டு மீண்டும் குடும்பத்தில் இடம்பெற முயல்வது இயல்பு. இது ஓர் அகப்பொருட் துறையுமாகும்: ஆனால் இங்கு யாருடைய தூண்டுதலும் இன்றி-வேண்டுகோள் மறுப்புரைகளுக்கும் இடம் இல்லாதபடி-ப் புதல்வனே பெற்றோர்களை ஒன்று சேர்த்து வைக்கிறான். இது மிக மிக இயல்பாக, இன்பமாக, எண்ணி எண்ணி மகிழத்தக்க வகையில் நிகழுகின்றது.

குடும்பத்தின் பெருமையை மனைவி கட்டிக் காக்கின்றாள்; அந்த மனைவியின் பெருமையை அவள் வயிற்றில் உதித்த மைந்தன் கட்டிக்காக்கின்றான். ‘நன்கலம் நன்மக்கட்பேறு’ என்ற தமிழ் மறை பொய்க்குமா?

கன்னியாகுமரி, மாவட்டம் - ஊரும் பேரும்

தி. முகுந்தன், எம். ஏ
கருங்கல்

இன்றைய கன்னியாகுமரி மாவட்டமும், நெல்லை மாவட்டத்து செங்கோட்டை வட்டமும் ஒரு கால் ஆட்சி முறையில், அண்டை மாநிலமாம் மலையாள மாநிலத்தோடு இணைந்து கிடந்தன. மொழி வழியே பண்பாடு பிறிதாகி நின்றிலங்கியமையால் வந்த விரிசல் இந்த சேய்த் தமிழ்ப் பரப்பினைத் தாய்த் தமிழகத்தோடு இணைய வைத்தது. இவ்வாறு இணைந்த இத் தமிழ் நிலத்துள்' குமரி மாவட்டத்தினைச் சார்ந்த ஊர்ப் பெயர்களைப் பல்வேறு நிலையில் வகுத்து சில முக்கிய வரலாற்றுக் குறிப்புகளுடன் கோடிட்டுக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

நாகர்கோவிலைத் தலைமையூராகக் கொண்டிலங்குவது இம் மாவட்டம்; இம்மாவட்டத்துள் கோயில் என்னும் சொல்லினை அடியாகக் கொண்டு நாகர்கோவில் என்னும் ஊர் அமைந்துள்ளதுபோல கிருட்டிணன்கோயில்,குமரகோயில்என்னும்ஊர்ப்பெயர்களும்இங்கு உள்ளன. நாகர்கோவிலகத்து இன்று இந்து மதத்தினர் இறைஞ்சும் நாகராசர் ஆலயத் தூண்களின் சமண சமயத் தீர்த்தங்கரர்களான பார்சவ நாதரும். மகா வீரரும் தவக் கோலத்தில் காட்சி' தருகின்ற திருக் கோலங்கள் சமணர் தம் கோயிலாக, முன்னர் இது இருந்தமைக்குரிய வரலாற்றுத் தடயமாகஉள்ளன.முருகவேள்பெருமானின் அறுபடை வீடுகளுள் ஒன்றுகிய திருஏரகம் குமர கோயிலே எனக் கொள்ள இடமுள்ளது. 'திருவேரகம் மலை நாட்டில் உள்ள திருப்பதி, என்று நச்சினர்க் கினியர் குறிப்பிடுகின்மையும், திருவேரகம்என்னும் சொல் 'நாஞ்சில் என்னும் பொருள் தழுவி நிற்கினறமையும் இதனை வலியுறுத்திக் காட்டும்.

ஆறுகளின் பெயரினுகிய ஊர்கள் பல குமரி மாவட்டத்தில் உள்ளன. கோட்டாறு, திருவட்டாறு. கோதையாறு போலும் பெயர்கள் இதற்கு எடுத்துக் காட்டாகும். இத்தகு பெயர்களுள், பழந்தமிழ் நில வரலாற்றில் வணிகச் சிறப்பால் புகழீண்டியது கோட்டாறு ஒன்றே. மாங்குடி மருதனர் புற நானூற்றுப் பாடல் ஒன்று புகழ்ந்

துரைக்கும் வாட்டாற்று எழினியாதன் திருவட்டாற்றினைச் சூழ்ந்த பகுதியினை ஆட்சி நடத்திய வேளிர் குலவேந்தனாக இருத்தல் வேண்டும்.

சேரி என்னும் தூய தமிழ் சொல் 'குடியிருப்பு, என்னும் பொருண்மை பயப்பது. சமூக அமைப்பின் தாழ்ந்தோர் உறையும் இடம் என்னும் பொருள் இச்சொல் தழுவியது பிற்பட்ட காலத்தே ஆம். வடசேரி, ஒழுகினசேரி, பரசேரி வீராணி, என்னும் வீரநாரயண சேரி போலும்ஊர்ப்பெயர்கள் இம்மாவட்டத்தில்உள்ளன.இவற்றுள் இன்று வடசேரி எனவழங்கும் ஊர், ஒருகால் சோழ புரம் என வழங்கி வந்துள்ளது .,நாஞ்சில் நாட்டில் உள்ளகோட்டாறுஎன்னும் நகரைக் குலோத்துங்கச் சோழன் கைக்கொண்டு சிவன்கோயில் ஒன்று கட்டுவித்து 'இராசேந்திர சோழபுரம், எனப் பெயரிட்டான். கோயில் சூழ்ந்த இடம் சோழபுரம் என பெயர்பெற்றது, என பேராசிரியர் சேது பிள்ளை தமது 'தமிழகம்—ஊரும்' பேரும், (பக்கம் 264) நூலில் உரைக்கிறார். செந்தமிழ் நலம் சான்ற சேதுபிள்ளை அவர்கள் உரைக்கும் கோட்டாறு என்னும் பெயர் ஒருகாலத்தில்இன்றைய ஒழுகினசேரி வடசேரி என்னும் ஊர்களைத் தன்னகத்தே கொண்ட பேரூராகும்:இன்றுகோட்டாறுஎன்பது நாகர்கோவில் ஊருள் அடங்கிய ஒரு ஊராகும் வடசேரி ஊரில் உள்ளசிவன்கோயில்இன்றுசோழராசக் கோயில் என்று அழைக்கப் பெறுகின்றமைதனை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளுங்கால் இவ்வூரே முன்னர்சோழபுரம் என வழங்கியுள்ளமை தெளிவுறும் .

தமிழகத்தின் பிறப்பகுதிகளில் 'வாயில்'எனயிறும்ஊர்ப்பெயர்களைக் காணலாம். ஆயின். வாயில் எனப் பொருள் கிளக்கும் 'கடை, யெனயிறும் பெயர்களைத் தமிழகத்தில் குமரி மாவட்டத்தில்மட்டுமே காணலாம், புதுக்கடை. பழையகடை உண்ணாமலைக்கடை இரவிபுதூர்க்கடை காட்டுக்கடை சுங்கான்கடைபோலும்ஊர்ப்பெயர்கள் இம்மாவட்டத்தில் இலங்குகின்றன.இவற்றுள்சுங்கான்கடைஎன்னும் ஊர், முன்பு இங்கு செயல் பட்டு வந்த உல்குச் சாவடியினை இன்று நினைவுப் படுத்துகிறது. ஊர் என முடியும் ஊர்ப் பெயர் வரிசையில் இம்மாவட்டத்தில் தேரூர்,நல்லூர், மருங்கூர்தோப்பூர்,அருமநல்லூர் வீரவ நல்லூர் வேம்பனூர் என்னும் ஊர்ப் பெயர்கள் உள்ளன. பொதுவாக இம் மாவட்டத்தினைப் பொறுத்த அளவில் தோவாளை,

அகத்தீசுவரம் வட்டங்களில் ஊரென அமையும் ஊர்களை மிகுந்த நிலையில் காணலாம். வேம்பனூர் என்னும் ஊர் பாண்டியர் ஆட்சிக்குள் இம்மாவட்டம் உட்பட்டிருந்தமைதனைத் தெளிவுறுத்தும் ஊராகும்.

கல்குளம், விளவங்கோடு வட்டங்களுள் 'விளை, என முடியும் ஊர்ப் பெயர் வரிசையில் கோழிப்போர்விளை, கொல்லன் விளை, களியாக்காவிளை போலும் ஊர்கள் உள்ளன. தோவாளைவட்டத்தில் திட்டுவிளை என்றோர் ஊர் உள்ளது. நன்செய் நிலங்கள் மல்கிய தோவாளை, அகத்தீசுவரம் வட்டங்களில் 'விளை' என வரும் பெயர் அருகி நிற்க, விளவங்கோடு, கல்குளம் வட்டங்களில் பல்கிப் பெருகி காணப்பெறுகின்றமை எண்ணுதற்குரியது. விளை என்னும் பெயர் நன்செய் புன்செய் நிலத்திற்குப் பொதுப்பெயராயினும் சிறப்பு நிலையால் நன்செய் ஒழித்து புன்செய் நிலத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

'கோடு' என்னும் பெயர் மலை நாட்டுப் பகுதியினைக் குறிக்கும் பெயராகும். திருப் பன்றிக்கோடு, திக்கணங்கோடு, திருவிதாங்கோடு, ஆலங்கோடு, கற்கோடு, நெட்டாங்கோடு, விளவங்கோடு, கொல்லங்கோடு போலும் ஊர்ப் பெயர்களை விளவங்கோடு, கல்குளம் வட்டங்களில், 'காணும் இடமெல்லாம் இக்கோடுகளோ?' என ஐயுற்று வினவும் வண்ணம் காணலாம். இம்மாவட்டத்து பழையக் கல்வெட்டுகள் குறிப்பிடும் முதாங்கோடு என்னும் ஊரும், வேள்வி குடிச் செப்பேடு உரைக்கும் புதாங்கோடு என்னும் ஊரும் 'திருவிதாங்கோடு' என்னும் ஊரைக் குறிப்பிடும் ஊர்ப்பெயர்கள் என்பர். வட்டெழுத்துக்கள் 'பு' விற்கும் 'மு' விற்கும் உரிய வரி வடிவத்தில் மிகுந்த வேறுபாடு இன்மை இவ்வாறு இருவேறுபட்டமைக்குக் காரணம் என்றும், 'திருமுதாங்கோடு' என்னும் பெயரே 'திருவிதாங்கோடு' என்று திரிபிற்கு இடம் நல்கீற்று என இம்மாவட்டத்தினைச் சார்ந்த தமிழறிஞர் திரு. செ. சதாசிவம் அவர்கள் கருதுகிறார்கள்.

குழித்துறை ஊரினுக்கு அருகில் அதங்கோடு என்றழைக்கப் பெறும் பிறிதோர் ஊர் உள்ளது. "அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசாற்கு" எனத் தொல்காப்பியப் பாயிர அடிகள் உரைக்கும் அதங்கோட்டாசன் இவ்வூரினைச் சார்ந்தவர்

என்பர். மேலும் ஆசான் என்னும் அருந்தமிழ்ச்சொல் கற்றுத் துறைபோகிய ஆசிரியர் தம்மைக் குறிக்கும் சொல்லாக இப்பகுதி மக்களிடையே பெரிதும் வழக்கில் உள்ளது.

முல்லை நிலத்தைச் சார்ந்த ஊர்கள் 'காடு' எனப் பெயர் பெற்றமையும்: துவரங்காடு, நாவல்காடு, கள்ளியங்காடு, விளாங் காடு என்னும் ஊர்ப்பெயர்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. இத் தகைய ஊர்கள் மருதம் சான்ற நிலத்தே உள்ளமை நோக்க, 'காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கிய' முன்னையோர் செயல் நினைவிற்கு வரும்.

பாண்டிய நாட்டில் மிகுதியாக வழங்கும் 'பட்டி' என்னும் ஊரும், தமிழகத்தின் பிறபகுதிகளில் கடற்கரை ஊரினைக் குறிக் கும் குப்பம், பாக்கம் என்னும் பெயரமைப்புகளும் குமரி மாவட் டத்தில் இல்லை. குப்பம், பாக்கம் என்னும் ஊர்களுக்கு மாறுக துறை, பட்டினம் என்னும் பெயர்கள் கடற்கரை ஊர்களைக் குறிக்கும் பெயர்களாக இம்மாவட்டத்தில் உள்ளன. இவ்வரிசை யில் கேசவன் புத்தன்துறை, இராமன்துறை, இனையம் புத்தன் துறை என்னும் கடற்கரை ஊர்கள் அமைந்துள்ளன. துறை என்னும் பெயர் ஆற்றோரம் அமைந்த ஊர்களைக் குறிக்கும் சொல் லாக, காட்டாத் துறை, குழித்துறை என்னும் ஊர்ப் பெயர்களில் பயின்று நிற்கிறது; 'பட்டினம்' என வரும் பெயரில் தேங்காய்ப் பட்டினம் என்னும் நெய்தல் நில ஊர் ஒன்று உள்ளது.

தமிழகத்து நானிலப் பாகுபாட்டில் குறுஞ்சி நிலம் என்பதும் ஒன்று. இந்நிலப்பகுதி ஊர்கள் 'குறிச்சி' எனப் பெயர் பெறும். குமரி மாவட்டத்தில் திரு. நயினார்க் குறிச்சி, முத்தளக்குறிச்சி, கற்குறிச்சி, மணவாளக்குறிச்சி என்னும் ஊர்கள் உள்ளன. "ஆதியில் குறிச்சி என்பது குறவர் குடியிருப்பைக் குறித்ததாயினும், பிற்காலத்தில் மற்றைய குலத்தரர் வாழும் சிற்றூர்களும் அப் பெயர் பெற்றன." என்பார் சேதுபிள்ளை. (தமிழகம்—ஊரும் பேரும். பக்கம் 6). குமரி மாவட்டத்தில் குறிச்சிப் பெயர் வரி சையில் உள்ள மணவாளக்குறிச்சி என்னும் ஊர் கடற்கரை ஊராக உள்ளமை நோக்க, பிற மரபினர் குடியிருக்கும் பகுதியினையும்

'குறிச்சி' என்னும் சொல் இணைத்து பொருள் விரிவு பெற்றமையால் வந்த நிலமயக்கப் பெயரே ஆகும் எனத்தெளியலாம்.

பாண்டி என அமையும் ஊர்ப்பெயருள் அழகியபாண்டிபுரம், பூதப்பாண்டி, என்னும் ஊர்கள் உள்ளன. நாஞ்சில் நாட்டு பூதப்பாண்டி, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் பெயரினைக் கொண்டதாகும். ஒல்லையூர் என்பது புதுக்கோட்டையினைச் சேர்ந்த ஒலியமங்கலம் என்பர். அழகிய பாண்டி புரத்தின் பெயர் காரணம் உரைக்கும் பேராசிரியர் கே. என். சிவராசபிள்ளை அவர்கள், பூதப்பாண்டியனுக்குப்பின்னர் வந்த அழகிய பாண்டியன், பொதுகைச் சிற்றரசன் ஆய் வேந்தனை வென்று, தன் வென்றிச் சிறப்பு மேம்பட மலை அடிவாரத்து இவ்வூருக்கு அழகிய பாண்டிபுரம் என பெயரமைத்தான் எனக் கூறியுள்ளார். பூதப்பாண்டி, அழகிய பாண்டிபுரம் என்னும் இரு ஊர்களும் நாஞ்சில் தமிழ் நிலம் ஒருகால் தென்பாண்டி நாடாக இருந்தமைதனைத் தெளிவுறுத்துகின்றன,

புரம் என அமையும் பெயர் வரிசையில் சோழ புரம் பார்வதிபுரம், கேரள புரம் என்னும் ஊர்கள் உள்ளன. இவற்றுள் கேரள்புரம் என்னும் ஊர் சேரர் தம் ஆட்சியில் இம்மாவட்டம் இருந்தமைதனை நிறுவும். சேரலம் என்னும் சொல்லில் நின்றே 'கேரளம் என்னும் சொல் ஆக்கம் பெற்றது!

தாவரப் பெயரினை அடியாகக் கொண்ட பல ஊர்ப்பெயர்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. ஆலஞ்சோலை, குறும்பனை, தேங்காய்ப்பட்டினம் போன்ற ஊர்கள் இவ்வகையில் அமைந்தனவாகும். இவற்றுள் கடற்கரை ஊர்களான தேங்காய்ப்பட்டினம், குறும்பனை என்னும் ஊர்கள் கடல் கொண்ட குமரிக் கண்டமதில் இருந்த ஏழ்தெங்க நாடு, ஏழ் குறும்பனை நாடு என்னும் நாடுகள் இருந்த செய்தியினை நினைவிற்குக் கொணர்கின்றன.

பண்டைத் தமிழர் இயற்கையோடு சிவணிய முறையில் தம் வாழ்க்கை முறையினை நெறியாக அமைத்துக்கொண்டார்கள். அவர்களின் நானிலப் பகுப்பு முறையும், ஊர்களின் பெயர்களும் இதனைத் தெள்ளத் தெளிய புலப்படுத்தி நிற்கும். இந்த வரை

யறைக்கு உட்பட்ட நிலையில் நாஞ்சில் மாவட்டத்து ஊர்களும் பெயர் பெற்று தொன்மை சிறப்பு கனிய அமைந்துள்ளன. வரலாற்று நோக்கில், சில ஊர்கள் தாம் கொண்டுள்ள பெயர் நிலையால் 'இது மூவேந்தர் ஆண்ட நாடு, எனச் சொல்லாமற் சொல்லிப் பறை சாற்றுகின்றன!

திராவிட மொழிகளில்

வண்ணனை அமைப்பும் - வரலாற்று அமைப்பும்

திருமிகு இரா. கோதண்டராமன் எம். ஏ. எம். ஏ.

தொகுதி 72 பகுதி 1ன் தொடர்ச்சி

குறிப்பு வினையாலணையும் பெயர்கள்: பேச்சுத்தமிழில் வழங்கும் நல்லவன், தீயவன், பெரியவன், முதியவன் போன்ற சொல் அமைப்புக்கள் இலக்கணப் புலவர்களால் குறிப்புவினையாலணையும் பெயர்களாகக் குறிக்கப் பெறுகின்றன. இத்தகைய சொல்லமைப்புக் களைமுறையே *நல்லவனு. *தீயவனு, *பெரியவனு *முதியவனு ஆகியவற்றின் ஒடுக்கங்களாகக் கொண்டு பின்வருமாறு ஆராயலாம்[1]

1. *நல்லவனு/*நல்லவது <*நல்லவந்து <*நல்லவந்து <*நல்லவம்—து

*நல்லவம்-<*நல்லவய்ம் <*நல்லவய்—உம்
*நல்லவய்-<*நல்லவு-அய்
*நல்லவு-<*நல்லபு <*நல்லம்பு <*நல்லப் -பு.
*நல்லம் <*நல்லய்ம் <*நல்லய்-உம்
*நல்லய்-<*நல்-அய்.

2 *தீயவனு/*தீயவது<*தீயவந்து<*தீயவந்து<*தீயவம்-து

*தீயவம்-<*தீயவய்ம் <*தீயவய்-உம்
*தீயவய்-<*தீயவு-அய்
*தீயவு-<*தீயபு <*தீயம்பு <*தீயம்-பு
*தீயம்-<*தீயய்ம் <*தீயய்-உம்
*தீயய்-<*தீய்-அய்.

---

1. *நல்லவனு. *தீயவனு. *பெரியவனு போன்றசொல்லமைப் புக்கள் ஆய்வுக்காக மட்டும் இங்கு அமைத்துக்கொள்ளப்படவில்லை. உண்மையில் இத்தகைய சொல்லமைப்புக்கள் நான்காம் வேற்றுமை உருபின் முன்னர் தமிழில் நிகழ்கின்றன. இச்சொல்லமைப்புக்களில் பிந்திய வழவங்களே நல்லவன், தீயவன், பெரியவன் போன்ற சொல்லமைப்புக்கள்.

இவ் ஆய்வு முறையை எல்லா ஆண்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்களுக்கும் அமைத்துக்கொள்க. பெரியவள், பெரியவர், பெரியவை போன்ற ஏனைய குறிப்புவினையாலணையும் பெயர்களை நேரடியாக * பெரியவு-அள்/அர்/ஐ எனப் பிரித்து * பெரியவு- என்ற சொல்லமைப்பை மேலே * நல்லவு- * தீயவு ஆகியவற்றை ஆராய்ந்ததுபோல் ஆராயவேண்டும். நல்லது, தீயது போன்றகுறிப்பு வினையாலணையும் பெயர்கள் பின்வருமாறு ஆராயப்பெறும்.

நல்லது < * நல்லந்து △ * நல்லம்-து.

தியது < * தீயது < * தீயம்-து.

இவ் ஆய்வில் நிகழும் நல்லம், தீயம் ஆகியவற்றின் வரலாற்று அமைப்பு மேலே ஆராயப்பெற்றுள்ளது.

மேலே நிகழ்த்தப்பெற்ற ஆய்வில் * நல்லவய், * தீயவய்; * நல்லம், * தீயம்; * நல்லய், * தீயய் ஆகிய சொல்லமைப்புக்கள் தென்படுவதைக்காணலாம். இவற்றுள் * நல்லவய், * தீயவய் முறையே நல்லவை, தீயவை
என அமைந்து பலவின்பால் குறிப்புவினையாலணையும்பெயர்களாக வும், நல்லம், தீயம் ஆகியவைதன்மைபன்மைக்குறிப்புவினைமுற்றுக் களாகவும், * நல்லய், * தீயய் ஆகியவை நல்லை, தீயை என அமைந்து முன்னிலை ஒருமை குறிப்புவினைமுற்றுக்களாகவும் தமிழில் நடைபெறுகின்றன. கன்னடத்தில் அரிதாக வழங்கும் பலவின்பால் குறிப்புவினையாலணையும் பெயர்கள் மேல் ஆய்வில் தென்படும் * நல்லவு, * தீயவு போன்ற அமைப்பினவாகக் கொள்ளப்பெறும் இவ்வாறே பழங்கன்னடத்தில் நிகழும் ஆண்பாற் குறிப்புவினையா லணையும் பெயர்கள் மேற்படி ஆய்வின் ஒரு கட்டத்தில் குறிக்கப் பெற்றுள்ள * நல்லவம், * தீயவம் போன்ற அமைப்பினவாகக் கருதப்பெறும். * நல்லவம், * பெரியவம், * கெட்டவம் போன்ற சொல்லமைப்புக்கள் தமிழகத்தின் வடமாவட்டங்களில் வழங்கும் பேச்சுத்தமிழில் உள்ள நல்லவங்க 'நல்லவர்கள்', பெரியவங்க 'பெரியவர்கள்', கெட்டவங்க 'கெட்டவர்கள்' போன்ற பலர்பால் குறிப்பு வினையாலணையும் பெயர்களின் பகுதியாக நிகழ்கின்றன. இதனைப் பின்வரும் ஆய்வின் மூலம் தெளியலாம்.

நல்லவங்க < * நல்லவங்கு-அ, நல்லவங்கு < * நல்லவம்-கு
பெரியவங்க < * பெரியவங்கு-அ. * பெரியவங்கு < *

பெரியவம்-கு

கெட்டவங்க < *கெட்டவங்கு-அ. கெட்டவங்கு < *கெட்ட வம்-கு.

குமரி மாவட்டத்து நாடார் பேச்சுத்தமிழில் மேற்படி பலர்பால் குறிப்புவினையாலணையும் பெயர்களுக்கு நிகராக நல்லவிய, பெரிய விய, கெட்டவிய போன்ற சொல்லமைப்புக்கள் காணப்படுகின்றன. இவை புகரக் கிளவியின் முன் நிகழும் *நல்லம்-, *பெரியம்-, *கெட்டம்-ஆகியவற்றின் அடியாகத் தோன்றியமை பின்வரும் ஆய்வின் மூலம் புலப்படும்.

நல்லவிய < *நல்லவு - இய. *நல்லவு < *நல்லபு < *நல்லம்பு < *நல்லம்-பு

பெரியவிய < *பெரியவு இய *பெரியவு - < *பெரியபு— < *பெரியம்பு < *பெரியம்-பு

கெட்டவிய < *கெட்டவு-இய *கெட்டவு < *கெட்டபு கெட்டம்பு < *கெட்டம்-பு

இவ் ஆய்வில் நிகழும் *நல்லம். *பெரியம். *கெட்டம் ஆகியவற்றின்வரலாற்று அமைப்பைமுன்னர் குறிப்பிட்டவாறு ஆராய்ந்து கொள்க.

குறிப்பு வினைமுற்றுக்கள்: பழந்தமிழில் நிகழும் நல்லன், தீயன் பெரியன், ஊரன், நாடன், போன்ற சொல்லமைப்புக்கள் குறிப்பு வினைமுற்றுக்களாகக் கருதப்பெறுகின்றன. இக்குறிப்பு வினைமுற்றுக்கள் துகரக்கிளவியின் முன் நிகழும் *நல்லம்-, *தீயம்-, *பெரியம்-, *ஊரம்-, *நாடம் ஆகியவற்றின் அடியாகத் தோன்றிய செய்தி பின்வரும் ஆய்வின் மூலம் பெறப்படும்.

*நல்லம்-து > *நல்லந்து > *நல்லந்நு > *நல்லநு *நல்லனு > நல்லன்.

*தீயம்-து > *தீயந்து > *தீயந்நு > *தீயநு / *தீயனு > தீயன்

*பெரியம்-து > *பெரியந்து > *பெரியந்நு/ *பெரியநு >/பெரியனு *பெரியன்

*ஊரம்-து > *ஊரந்து > *ஊரந்நு > *ஊரநு / *ஊரனு ஊரன்

*நாடம்-து > *நாடந்து > *நாடந்நு > *நாடநு / *நாடனு > நாடன்

மேற்படி ஆய்வில் நிகழும் *நல்லம், தீயம், *பெரியம், *ஊரம் போன்றசொல்லமைப்புக்கள் தோன்றியமுறையை ஆராயும் நெறி நல்லவன், தீயவன் ஆகிய சொல்லமைப்புக்கள் பற்றிய ஆய்வில்

விளக்கப்பெற்றுள்ளது. இனி நன்று, தீது, பெரிது, போன்ற ஒன்றன் பால் குறிப்பு வினைமுற்றுக்களைப் பின்வருமாறு ஆராயலாம்.

நன்று < *நல்ந்து < *நலுந்து < *நல் - உம்-து

தீது < *தீந்து < *தியந்து < *தீயுந்து < *தீய் - உம் து

பெரிது < *பெரிந்து < *பெரிய்ந்த < *பெரியுந்து பெரிய்-உம்-து

பேச்சுத்தமிழில் காணப்படும் பெரிசு, சிறிசு, ஆகிய குறிப்பு வினை முற்றுக்களைப் பின்வருமாறு ஆராயலாம்.

பெரிசு < *பெரிசு < *பெரிச்சு < *பெரிய்ச்சு < *பெரிய்த்து < *பெரிய்-து

சிறிசு < *சிறிசு < *சிறிச்சு < *சிறிய்ச்சு < *சிறிய்த்து < *சிறிய்-து

(சிறிசு, பெரிசு என்பவற்றுள் ஈற்றில் நிகழும் உகரம் ஊர்ந்த சகரத்தை காய்ச்சு என்பதன் ஈற்றில் நிகழில் உகரம் ஊர்ந்த சகரத்தைப் போல் ஒலிக்கவும்)

பகுதி 2

இப்பகுதியில் – அன் ஈற்றனவாகக் கருதப்பெறும் ஆண்பாற் சொற்களின் தோற்றமும் மரம், குளம் போன்ற- அம் ஈற்றனவாகக் கருதப்பெறும் சொற்கள் மரன், குளன் போன்ற – அன் ஈற்றனவாக அமைந்தமுறையும், - அன் -, இன்- ஆகிய இடைச் சொற்களின் தோற்றமும், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் அமைந்த சில வேற்றுமை உருபுகளின் தோற்றமும், இறுதியில் சில உயர்திணை வினைமுற்று விகுதிகளின் தோற்றமும், ஆராயப்பெறும்.

அன் ஈற்று ஆண்பாற் பெயர்கள் தமிழில் - அன் ஈற்றனவாகக் கருதப்பெறும் ஆண்பாற் பெயர்கள், இன்றைய கன்னடத்தில்–அனு (< *அநு) ஈற்றனவாகவும், பழங்கன்னடத்தில் – அம் ஈற்றனவாக வும், நடைபெறுகின்றன. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக் களில் காணலாம்.

பழங்கன்னடம்	இன்றைய கன்னடம்	தமிழ்
அவம் (HKL பக் 130)	அவனு	அவன்
அரசம் (ஷை 168)		அரசன்
கெழவம் (ஷை 77)		கிழவன்

ஒர்வம் (டி 101)		ஒருவன்
அண்ணம் (டி 82)		அண்ணன்
காதலம் (டி 81)		காதலன்
மகம் (DN பக் 54)	மகனு	மகன்

மேல் எடுத்துக்காட்டுக்களில் பழங்கன்னடத்தில் நிகழும் சொற்கள் துகரக் கிளவியின் முன் நடைபெற்ற நிலையில் தமிழிலும், இன்றைய கன்னடத்திலும் காணப்படும் சொற்கள் தோற்றம் கொண்டனவாகக் கருதலாம். இதனைப் பின்வருமாறு அமைத்துக்காட்டலாம்.

*அவம்—து > *அவந்து > *அவந்நு > *அவநு / அவனு > அவன்

*அரசம்—து > *அரசந்த > *அரசந்நு > *அரசநு / அரசனு > அரசன்

*கிழவம்—து > *கிழவந்து > *கிழவந்நு > *கிழவநு / கிழவனு > கிழவன்

*ஒருவம்—து > *ஒருவந்து > *ஒருவந்நு > *ஒருவநு / ஒருவனு > ஒருவன்

*அண்ணம்—து > *அண்ணந்து > *அண்ணந்நு > *அண்ணநு / அண்ணனு > அண்ணன்

*காதலம்—து > *காதலந்து > *காதலந்நு > *காதலநு / காதலனு > காதலன்

*மகம் — து > *மகந்து > *மகந்நு > *மகநு / மகனு > மகன்

கன்னடத்தில் அண்ணந்திர் 'அண்ணன்மார்', மகந்திர் 'ஆண்மக்கள்' (Sons) அவந்திர் 'அவர்கள்' போன்ற பன்மைச் சொற்கள் காணப்படுகின்றன (HKL பக்கம் 92) வண்ணனை நிலையில் இச்சொற்களில் — திர் என்பது பன்மை விகுதியாகக்கருதப் படுகின்றது. ஆனால் வரலாற்று நிலையில் இச்சொற்கள் *அண்ணந்து—இர், *மகந்து—இர், *அவந்து — இர் என்ற ஆய்வுக்கு உட்படுவனவாதலால் — திர் என்பதை வரலாற்று நிலையில் பன்மை விகுதியாக ஏற்பதற்கில்லை மேற்படிபன்மைச்சொற்களில் தென்படும் *அண்ணந்து —, *மகந்து *அவந்து – ஆகிய சொல்லமைப்புக்கள் போலே நிகழ்த்தப் பெற்ற ஆய்விலும் தென்படுவதைக்காணலாம் அத்துடன் இவ் ஆய்வில்நிகழும் *அவனு, *அரசனு, *கிழவனு, *ஒருவனு, *அண்ணனு, *காதலனு, *மகனு ஆகிய வடிவங்கள் தமிழில் நான்காம் வேற்றுமை உருபின் முன் நிகழ்வதையும் கருத்தில் கொள்ளலாம். இவற்றில் ஈற்றில் நிகழும் உகரத்தை இலக்கணப்புலவர்கள் வண்ணனை நிலையில் சாரியையாகக் கொள்வர் உண்மையில் இவ்உகரம் வரலாற்று நிலையில் சாரியை அல்ல. மேற்படி உகரம் ஊர்ந்த னகர, ஈற்றுச் சொற்கள்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1	வைத்திய சாரசங்கிரகம்	ரூ.	15—00
2	பன்னூற்றிரட்டு	ரூ.	3—00
3	தமிழ்ச் சொல்லகராதி முதற்பாகம்	ரூ.	10—00
4	பெருந்தொகை	ரூ.	7—00
5	அரும் பொருள் விளக்க நிகண்டு	ரூ	2—50
6	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	ரூ.	2—50
7	சுகசந்தாசன தீபிகை	ரூ.	1—50
8	தமிழர் வாழ்வு	ரூ.	2—00
9	மாறனலங்காரம் (பொருளணியியலுரை)	ரூ.	5—00
10	பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்)	ரூ.	1—00
11	குருகை மான்மியம்	ரூ.	6—00
12	T-ஸ்ரீநிவாசயங்கார் நினைவு மலர்	ரூ.	1—00
13	கோவை கலம்பக நூல்கள்	ரூ.	5—00
14	உலா நூல்கள்	ரூ.	5—00
15	பாமாலை நூல்கள்	ரூ.	7—00
16	இலக்கிய நூல்கள்	ரூ.	7—00
17	இலக்கண நூல்கள்	ரூ	5—00
18	மநீஷா பஞ்சகம்	ரூ	5—00
19	பாண்டித்துரைத் தேவர் நூற்றாண்டு விழா மலர்	ரூ	1—00

குறிப்பு: 1. புத்தகங்கள் வேண்டுவோர், தேவைக்கு எழுதும் பொழுது 25 % முன்பணம் அனுப்பவேண்டும். பாக்கித் தொகைக்குபுத்தகங்கள் வி. பி.பி. மூலம் அனுப்பப்படும்

2. விற்பனையாளர்களுக்கும் நூலகத்திற்கும் 15 % கழிவு கொடுக்கப்படும்.

3 புத்தகங்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குவோரே ஏற்க வேண்டும்.

"செந்தமிழ்"

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இம்மலர் ஆண்டுக்கு நான்கு முறை வெளியிடப் பெறுவது

ஆண்டுச் சந்தா ரூ 5—00

புலவர்கள் பலர் எழுதிய அரியகட்டுரைகள், ஆய்வுரைகள் கொண்ட பழைய "செந்தமிழ்" இதழ்கள் ஆண்டு வாரியாகப் பைண்டு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விலை தனித் தனி ரூ 5—00

தேவைக்கு: **டி. பி. எஸ். பெரியசுவாமி**

செயலாளர்: மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54. தமிழ்ச் சங்கச் சாலை. மதுரை-1

இவ்விதழ் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்காக செயலாளர்
திரு. டி. பி. எஸ். பெரியசுவாமி அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது
அச்சிட்டோர் R சின்னம்மாள், பரணி பிரிண்டர்ஸ், 32 மேலரதவீதி விருதுநகர்.